ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி சமய - சமூக - இலக்கிய வெளியீடு மார்ச் 2011 25/=



# தொண்டன்

**மார்ச் 2011**

**மலர்: 43** **இதழ்: 02**

**ஆசிரியர்**
றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லியோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

**ஆலோசகர்கள்**
A.G. இராஜேந்திரம்
A.S. யோகராஜா

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**ஓவியங்கள்**
சுதா

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | : | 01 |
| தவக்காலம் | : | 02 |
| சுமத்தல் (கவிதை) | : | 03 |
| சோதனைகளை வெற்றி... | : | 04 |
| ஈழத்தை அளந்த புனிதன் | : | 06 |
| ஓபரமோர்கா | : | 07 |
| உங்கள் சுகமான... | : | 10 |
| யுத்தத்தின் சத்தங்கள்... | : | 11 |
| கடுகுக் கதை | : | 12 |
| இன்றைய உலகில்... | : | 13 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | : | 15 |
| துயர் வழி தாண்டி | : | 18 |
| மாணவர் பக்கம் | : | 19 |
| சமூகச் சாரல் | : | 21 |
| இலக்கிய மஞ்சரி | : | 23 |
| பெண்ணே உன் கதி... | : | 25 |
| எண்ணிப்பார்க்கையில்... | : | 26 |
| விவிலியம் கற்போம் | : | 27 |
| அறிவை வளர்ப்போம் | : | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 25/=
ஆண்டு சந்தா : 400/=
(தபாற்செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு...

உலகத்தைக் கண்கலங்க வைத்திருக்கிறது ஜப்பான் நாட்டில் ஏற்பட்டுள்ள சுனாமி அனர்த்தம். எத்தனை ஆயிரம் உயிர்கள், சொத்துகள் காவுகொள்ளப்பட்டுள்ளன என்று இன்னும் அறுதியும் உறுதியுமாகக் கணிக்கமுடியாத நிலை.

2ம் உலகப்போரின் பின் மிகப்பெரிய அழிவிலிருந்து, வீழ்ச்சியிலிருந்து மிகவுந் துரிதமாக மீண்டு அபார வளர்ச்சியைக் கண்டுகொண்ட நாடு என்றால் அது ஜப்பான் நாடாகும்.

உலக வல்லரசுகளோடு தன்னையும் நிமிர்த்திக்கொண்ட நாடான ஜப்பான், சுறுசுறுப்பு, கடின உழைப்புக்கென பேர்போன நாடாக மெச்சப்படுகிறது. இருந்தும் அழிவுகளையே ஏற்படுத்துகின்ற அணு உலைகளையும் பெருமளவில் கொண்டிருப்பதனால், மழை விட்டாலும் தூறல் விடாத நிலையாக பின் விளைவுகள் ஜப்பான் நாட்டையும் ஏனைய உலக நாடுகளையும் இனிவருங் காலங்களில் பதம்பார்க்கக் காத்திருக்கிறது. இருப்பினும் இலங்கை உட்பட அனேக நாடுகள் தங்கள் நேசக்கரத்தினை ஜப்பானின் அல்லோல கல்லோல நிலையில் நீட்டியிருப்பது சந்தோசத்தைத் தருகிறது. தொண்டன் குடும்பத்தினராகிய நாம் அனைவரும் நமது மன உணர்வுகளாலும், செப உதவிகளினாலும் ஜப்பான் மக்களோடு ஐக்கியப்படுகிறோம்.

"ஆசியாவின் அதிசயம் இலங்கை" டைட்டில் / தலைப்பு நன்றாகத்தான் இருக்கிறது. கேட்கக்கூட ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. யதார்த்தத்தில் பூச்சியம். தலைப்பு கசக்கிறது. உச்சரிக்க நா கூசுகிறது. பசியாலும் பட்டினியாலும் மனிதனை வாடவைப்பது தான் அதிசயமா? போர்க்காலத்திலும் இதே நிலமை தான். போர் தற்காலிகமாக ஓய்ந்திருக்கும் இப்போதும் அதே நிலைமைதான். இந்த ஆண்டில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் வரவு செலவு (பட்ஜட்) அறிக்கையிலும் பாதுகாப்புச் செலவீனங்களுக்காக ஒதுக்கவிருக்கும் தொகை குறையப்போவதில்லை எனப் பாராளுமன்றத்தில் பிரதமர் டி.எம். ஜயரத்னவின் "இந்தியாவில் இயங்கும் புலிகள்" என்று தெரிவித்த பதத்திலிருந்து ஓரளவு அனுமானிக்க முடிகிறது. பயங்கரவாதத் தடைச்சட்டம் இருந்தென்ன கொலை, கொள்ளை, சூட்டுச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்திவிட்டார்களா? அல்லது எந்தவகையில் இந்தச் சட்டத்தைத் தங்கள் கைவசம் வைத்துக்கொண்டு தங்கள் காரியங்களைச் சாதித்துக்கொள்கிறார்கள்? பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு நடந்த நிலை, தெற்கிலே எதிர்க்கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களின்போது நடாத்தப்படுகின்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் - இவற்றையெல்லாம் பார்க்கும் போது சட்டங்கள் சட்டங்களாகவே கிடப்பில் இருக்கின்றன. நடைமுறையில் அதிகாரவர்க்கத்திற்குச் சாதகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

எம்மையே நாம் திரும்பிப் பார்க்க, நடந்து வந்த பாதையை மீட்டுப் பார்க்க, செப, தப, தான தர்மங்களால் இறை உறவையும், மனித உறவையும் சீர் செய்து புனித வழியில் நடக்க நமக்குத் தரப்பட்டிருக்கிறது தவக்காலம். இத்தவக்காலம் ஒரு மாதத்தையும் கடந்து 40 நாட்களாக இருக்கிறதே என்று சலித்துக்கொள்ளாமல், தந்தையாகிய கடவுள் தம் மாந்தரைப் புனிதப்படுத்த, புதுப்படைப்பாக மாற்ற எடுத்துக்கொண்ட 40 ஆண்டுகளைப் போன்றது எனவும் (தி.பா 95:10) நீடிய பயணத்துக்காக ஒழுங்கு செய்யப்பட்ட எலிசா அனுபவத்தைப் போலவும் (1அர 19:8) பகிரங்க வாழ்வுக்கு முன்னேற்பாடாக இயேசு கடைப்பிடித்த பாலைவன அனுபவத்தைப் போலவும் (மாற் 1:13) மனித சீரமைப்புக்கு 40 நாட்களைக் கொண்ட தவக்காலம் அவசியமென நாம் மனதார ஏற்றுக்கொள்வோமேயானால் தவக்காலம் எமக்கு ஒரு பொற்காலமே. இயேசுவின் பாடுகள், மரணத்தைத் தியானித்து மனம் மாறுவோம், மனிதத்தை நேசிக்கும் மனிதர்களாகுவோம்.

- ஆசிரியர்



## இறைவாக்கு

"கடவுள் அவர்கள் செய்தது அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளினின்று விலகியதை அவர் கண்டு, தம் மனத்தை மாற்றிக்கொண்டார்; தாம் அவர்கள் மீது அனுப்புவதாகச் சொன்ன தண்டனையை அனுப்பவில்லை"

(யோனா 3:10)


# தவக்காலம்



விபூதிப் புதன் தொடக்கம் பெரிய சனிக்கிழமை வரையிலான 40 நாட்களைத் தபசுகாலம் என அழைப்பர். உரோமைத் திருச்சபையில் இலத்தீன் சொல்லான 'குவாட்ரா ஜெசிமா' என்ற சொல்லே முதலில் பாவனையில் இருந்துள்ளது. இதிலிருந்தே குரோசிம காலம் என்ற சொல் தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் வழங்கி வந்தது.

இஸ்ராயேல் மக்கள் 40 ஆண்டுகள் பாலைவனத்தில் பயணித்த நிகழ்வு, இறைவாக்கினர் யோனா போன்றோரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் போன்ற விவிலியப் பின்புலத்திலிருந்தே 40 நாட்கள் பொருள் பெற்றன. இக்காலம் மறை உண்மைக்கு வழிநடத்துகின்ற காலம் எனத் தொடக்ககாலத் திருச்சபை கருதியதால் ஆயத்தக் கிறிஸ்தவர்களுக்கு இக்காலத்தில் மறைக்கல்வி அளிக்கப்பட்டு, புனித சனி அன்று திருமுழுக்கு அளிக்கப்பட்டது.

கிறிஸ்தவத்துக்கு எதிரான வன்முறைக் காலத்துக்குப் பின் பலரும் கிறிஸ்தவத்தைத் தழுவ முயன்றதால் பல கடுமையான நோன்பு




முறைகள் இக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. நோன்பு முறைகள் கிறிஸ்துவின் பாடுகள் மரணத்தோடு அடையாளப்படுத்தப்பட்டது. கடவுளோடும், பிறரோடும் ஒப்புரவாகும் காலமாக தபசு காலம் பொருள் பெற்றது.

ஐரோப்பிய நகரங்களில் பழங்காலத்தில் நோன்புக் காலத்துக்கு முன்னான நாட்கள் கொண்டாட்டமாக அனுசரிக்கப்பட்டன. நோன்புக் காலம் கடுமையாக இருந்தது. மத்திய காலத் திருச்சபையில் இறைச்சி, முட்டை மற்றும் பால் பொருட்கள் தவிர்க்கப்பட்டன. கீழைத்தேய மரபு மாறாத் திருச்சபையில் மரக்கறி உணவே பாவிக்கப்பட்டது.

இன்று தலத்திருச்சபையின் ஆயர்கள் அவையே நோன்பு நாட்களைத் தீர்மானிக்கிறது. திருச்சபைச் சட்டத்தில் 1251வது பிரிவு நோன்பு எடுக்கும் முறைகளைக் கூறுகிறது.

**- திருச்சபை வரலாற்றுத் துளிகள்**

## வத்திக்கான் நாடு




வத்திக்கான் நாடு, 178 நாடுகளுடன் முழு அரசியல் உறவைக் கொண்டுள்ளது. இது தவிர தனிச்சிறப்பான விதத்தில் ஐரோப்பிய ஒன்றிப்பு அவையுடனும் பாலஸ்தீனிய விடுதலை அமைப்புடனும் அரசியல் உறவைக் கொண்டுள்ளது. ஐ.நாவின் பல்வேறு அமைப்புகளில் சிறப்புப் பார்வையாளர் தகுதியும் பெற்றுள்ளது.

# சுமத்தல்

- கன்னிமுத்து வெல்லபதியான் -

இவர்கள் எல்லோருமே
யூதர்கள்
மகா கெட்டிக்காரர்கள்...
நாங்கள் எல்லோருமே
சிறுசிறு இயேசுக்கள்...
இழி செயல்கள்
இவர்களது கலை
இவைகளைச் சுமப்பது
எங்களின் வேலை
பழிகளையும்
பாவச் செயல்களையும்
சுமத்துவது
இவர்களது நாளாந்தக் கடமை
அவைகளை நாளாந்தம்
சுமப்பது எங்களின் கடமை

இயேசுபிரானே
இரக்கம் கொண்ட பிதாவே...
நீ சிலுவை சுமந்து சென்ற
கல்வாரி மலையின்
வழித்தடத்தில் நாமும் இன்று
சிலுவைகளைச்
சுமந்துகொண்டிருக்கிறோம்
அர்த்தராத்திரிப் பொழுதுகளிலும்
அமாவாசை இருட்டுகளிலும்
பிணங்களும் பேய்களும் குவிந்த
புதைகுழி மேடுகளிலும்
சிலுவைகளைச் சுமக்கிறோம்

இவர்கள் எல்லோருமே
யூதர்கள்
மகா கெட்டிக்காரர்கள்...
நாங்கள் எல்லோருமே
சிறுசிறு இயேசுக்கள்...
ஓ.... ஒன்று மட்டும்
உண்மை இயேசுபிரானே
நீ சுமந்ததும்
விடிவுக்காக
நாம் துன்பதுயரத்தை
தொடர்ந்து சுமப்பதும்
விடிவுக்காக
உமது சுமத்தலாலும்
எமது சுமத்தலாலும்
உலகமினி விடியும்






கப்பலுக்குப் புயல் சோதனை, பயிருக்கு வெள்ளஞ் சோதனை, பறவைக்குக் கண்ணி சோதனை. ஆனால் மனிதனுக்கு இவ்வுலகமே சோதனை. இந்த உலகிலே மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் சோதனையைச் சந்தித்தே ஆகவேண்டும். ஏன், இறைவனாயிருந்தும் மனிதனாகப் பிறந்த இயேசுவுக்கும் சோதனை வந்தது. ஆனால் இயேசு சோதனையைச் சந்தித்தபோதும் அதற்கு அடிமையாகவில்லை, சோர்ந்துவிடவுமில்லை. இறைவார்த்தையின் துணை கொண்டு சோதனையை வென்று சாதனையாளராக வெளிவந்தார். இயேசு எவ்வாறு சோதிக்கப்பட்டார் என்பதை மத்தேயு நற்செய்தி 4:1-11 வசனங்கள் தெளிவாக எடுத்துரைத்தாலும் அதைவிட மேலாக இன்னும் கொஞ்சம் ஆழமாக இயேசு ஏன் சோதிக்கப்பட்டார்? என்ற கேள்விக்கு விடை காண்பது அவசியமாகிறது. இயேசு சோதிக்கபட்ட நிகழ்வை நற்செய்தியாளர்கள் மூவர் எடுத்துரைக்கின்றனர். இங்கு அவர்களது நோக்கம் இயேசு சோதிக்கப்பட்டார் என்று வெறுமனே எடுத்துரைப்பது அல்ல. மாறாக ஏன் சோதிக்கப்பட்டார் என்பதைச் சுட்டிக் காட்டவந்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. வாசகத்தின் பின்னணியிலே சிந்திக்கும்போது இக்கேள்விக்கான மூன்று விடைகள் நமக்குக் கிடைக்கின்றன.

முதலாவது: மனித ஆற்றலை வெளிக்கொணரும் திறவுகோல் சோதனை என்னும் உண்மையை உலகிற்கு உணர்த்த இயேசு சோதிக்கப்பட்டார் என்ற விடை வெளிக் கொணரப்படுகிறது. 'தீமைகள் இல்லாமல் இருப்பது நல்லது ஆனால் சோதனைகள் இல்லாமல் இருப்பது நல்லதல்ல' என்கிறார் வால்டர் பகேஹாட் என்பவர். மேலோட்டமாகப் பார்த்தோமென்றால் சோதனைகளால் துன்பங்களும் துயரங்களும் குழப்பங்களுந்தான் வருகின்றன என்பது போலத் தோன்றும்; கொஞ்சம் ஆழமாகச் சிந்திக்கும்போது நமக்குள் புதைந்துள்ள திறமைகளையும் சுய ஆற்றலையும் நமக்கும் உலகிற்கும் எடுத்துரைக்கும் கருவிகள்தான் சோதனைகள் என்பது புரியவரும். சோதனைகள்தான் நம்முடைய வாழ்வின் அழுக்குகளை அகற்றி நம்மைப் புடமிட்ட மனிதர்களாக மாற்றுகின்றன. சோதனைகளும் துன்பங்களும் நம்முடைய வாழ்வில் இல்லையென்றால் நம்முடைய மதிப்பு என்னவென்று அறியாமலே நாம் மடிந்து போவோம்.

இரண்டாவது: "சோதிக்கப்படுவதென்பது வேறு, வீழ்வதென்பது வேறு" என்பதைச் சுட்டிக் காட்டவே இயேசு சோதிக்கப்பட்டார். பாவச் சேற்றில் வீழ்ந்து கிடக்கும் மனிதர்களைப் பார்த்து ஏன் இவ்வாறு தொடர்ச்சியாகப் பாவம் செய்கிறீர்கள் என்று கேட்டால் அவர்கள் வழக்கமாகக் கூறும் பதில் "நானும் பாவஞ் செய்யாமல் இருக்கத்தான் முயற்சிக்கிறேன். ஆனால் என்னால் முடியவில்லை" இது சரியான பதில் அல்ல. பல தடவைகளில் நாம் இயேசுவைப் பின்பற்றுவதை விட நம் தொடக்கப் பெற்றோர்களைத்தான் அதிகம் பின்பற்றுகிறோம். அவர்கள் இறைவன் தங்களுக்குக் கொடுத்திருந்த மனோ சக்தியை (WILL POWER) பயன்படுத்தாமலும் இறைவனது

உதவியைத் தேடாமலும் சோதனையில் வீழ்ந்தனர் என்பதைத் தொடக்கநூல் சுட்டிக் காட்டுகிறது. ஆனால் இயேசுவோ தனக்குள் இருந்த மனித ஆற்றல் மற்றும் இறைவனிடம் இருந்துவந்த இறையாற்றல் ஆகியவற்றைப் பயன்படுத்தி சோதனைகளை வெற்றி கண்டார். தங்களுக்கென இறைவன் கொடுத்துள்ள ஆற்றல்களை யார் பயன்படுத்துகிறார்களோ அவர்கள்தான் சோதனைகளை வெற்றிகொண்டு முதிர்ச்சியடைந்த மனிதர்களாக மாற முடியும் என்பதையும் இயேசுவின் சோதனை சுட்டிக் காட்டுகிறது.

மூன்றாவதாக: நம் வாழ்வில் வரும் சோதனைகளை எவ்வாறு வெற்றி கொள்வது என்பதற்கான வழியைக் காண்பிக்க இயேசு சோதிக்கப்பட்டார். சோதனைகளிலிருந்து எங்களைக் காத்தருளும் என்று செபிக்கக் கற்றுக்கொடுத்த இயேசு சோதனைகளிலிருந்து எவ்வாறு எங்களைக் காத்துக்கொள்ளலாம் என்கிற வழியையும் கற்றுக்கொடுக்கிறார். ஒவ்வொரு முறையும் சாத்தான் சோதித்தபோது அவனை வீழ்த்த இயேசு கையிலெடுத்த ஆயுதம் இறைவார்த்தை. கடவுளுடைய வார்த்தையை வல்லமையோடு உச்சரித்தபோது சோதித்தவன் சோர்ந்து, தோற்று ஓடிப்போனான். கடவுளின் வார்த்தைக்கு நம் வாழ்வில் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம்? கடவுளின் வார்த்தையின் வல்லமையை நாம் உணர்ந்திருக்கிறோமா? கடவுளின் வார்த்தை ஆற்றல்மிக்கது என்பதை அன்றாட வாழ்வில் அனுபவிக்கிறோமா? சிந்திப்போம்... செயல்படுவோம்...

**• அருள்தந்தை. மொறாயஸ் அடிகள்**

## (காதில் விழுந்த கதையொன்று) டீலா நோ டீலா...



சுவாமிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. ஞாயிறு பூசை ஒப்புக்கொடுக்கும்போது பீடத்துக்கு முன்னால இந்தக் கிழவி என்னமா நித்திரை கொள்ளுது. 'என்ன செய்யலாம்?' யோசித்தார். கிழவியின் பேரனைக் கூப்பிட்டார். "ஜீவன் உன்ட அம்மம்மா பீடத்துக்கு முன்னால நித்திரை தூங்கத் தொடங்கின உடனே நீ நறுக்கெண்டு ஒரு கிள்ளுக் கிள்ளிவிடு முழிச்சிருவா. மாஸ் முடிய மட்டும் மனிசிய நித்திரை தூங்காம நீதான் பாத்துக்கொள்ளணும். செய்வியா? செய்தியெண்டா ஒரு ஞாயிறு பூசைக்கு பத்து ரூபா தருவன். டீலா நோ டீலா...?" அவன் "டீல் பாதர்" என்றான். அந்த ஞாயிறு கிழவிக்குப் பக்கத்தில் பேரன் இருந்தான். படு அலட்டாக கிழவி பூசையுடன் கலந்திருந்தா. முடிந்தவுடன் சுவாமியிடம் ஓடி வந்தான். அவரும் காணிக்கைக் காசில் பத்து ரூபாவைக் கொடுத்தார், போய்விட்டான். அடுத்த ஞாயிறும் திருப்தியாகத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அதற்கடுத்த ஞாயிறு பேரன் பக்கத்தில் இருந்தான் ஆனால், கிழவி கடுமையாகத் தூக்கம் தூங்கி வழிந்ததை சுவாமியால் சகிக்க முடியவில்லை. மாஸ் முடிந்த கையுடன் அவனைக் கூப்பிட்டார். "என்னடா... டீலா நோ டீலா..." என்றார். அவனும் கூசாமல் "நோ டீல் பாதர்" என்றான். ஏ..ஏ..ஏன்... என்றார். "பாதர் அம்மம்மா என்னட்ட சொன்னாவு 'பேரா என்ட நித்திரையக் குழப்பாதடா உனக்கு ஒரு பூசைக்கு இருபது ரூபா தாறன். டீலா நோ டீலா' எண்டாவு. நானும் டீல் குடுத்திட்டன் பாதர்" என்றான். வாய் பிளந்து நின்றார் சுவாமியார்.

– பைந்தமிழ்க்குமரன் டேவிட் –

# ஈழத்தை அளந்த புனிதன் (யோசேவ் வாஸ்)

குறுங்காவியம்



## 17

**செண்பகக்குழல்வாய்மொழி**

(வேறு)

கண்டியில் அமைந்தகோவில்
கவினுறு அழகைக்கண்டு
மண்டியிட் டவரில்கண்டி
மன்னனுந் தானடக்கம்
அட்டமா திக்கிருந்தும்
அணியணி யாகவந்து
அன்னைதாள் பணிந்துநின்ற
அற்புதம் உணர்த்தவொண்ணா

இத்துட னீழந்தன்னில்
உருவினி லுயர்ந்தகோவில்
புத்தளத் தோடுமா
தோட்டமும் சேர்ந்துமூன்று
சத்திய முனிவன்தன்னந்
தனியனாய் நின்றுஆன்ம
சக்தியாற் புனைந்தகோவில்
சகடமே! அறிவாய்உண்மை

உயிர்த்தநம் யேசுதந்த
உணர்வினா லெழுந்தவேதம்
பயிர்களாய் ஈழமண்ணில்
பலன்தர விளையக்கண்டு
அஞ்சினார் பகைவரெல்லாம்
அணிதிரண் டேகிப்பின்னர்
துஞ்சினார் தூயர்கொண்ட
துணிவுமுன் தோல்விகண்டு

பயணமோ செய்வார்நீண்டு
பாதங்கள் வெறுமைபூணும்
அயர்வெனுஞ் சொல்லோஅவரின்
அகரா தியிலேஇல்லை
கையிற்கைக் குட்டையொன்று
கானலிற் கனவுகாணும்
தன்னிலை மறந்துகால்கள்
நடக்கவாய் செபங்களாகும்

இப்பணி யோடுமட்டுப்
படுத்தினார் தம்மையில்லை
தன்இறை மக்கள்எல்லாம்
தன்னிறை வடையவெண்ணிச்
செப்பருங் காரியமாகச்
செபங்களாய் ஆக்குவித்து
அப்பொழு திருந்தேஅச்சில்
அனைத்தையும் பதியவைத்தார்

ஈழமண் தனிலேபுதிய
திருச்சபை அமைத்தஅன்னார்
உழைப்பினில் உருகிரோமை
உயர்நிறை வேற்றுபீடம்
இலங்கையின் ஆயராக
அவர்நிலை உயர்த்தவெண்ணி
இருமுறை முனிவர்தம்மை
முடுகியும் தோற்றுப்போனார்

ஊழியத் தீயில்வெந்து
உருகிட வந்தாரன்றி
உயர்நிலைப் பதவிபேறு
எதனையுங் கருத்திற்கொண்டு
வாழ்ந்தவ ரில்லையோசேப்
வாசனெம் முனிவரென்று
தானது இறங்கிவந்து
வானமே சாட்சிசொல்லும்

தனியொரு மனிதனாகத்
தவத்திரு முனிவனன்று
பணிவிடை செய்பயன்தான்
இலங்கைவாழ் கத்தோலிக்கம்
ஏழ்மையும் சகிப்புத்தன்மை
எனஇரு வாட்களேந்தி
வாழ்விடை புரிந்தபோரின்
விளைவுதான் கத்தோலிக்கம்

இறைபணி தாகத்தோடு
இருபத்து நான்குஆண்டு
இலங்கைமண் முழுதுஞ்சுற்றி
சுற்றிலே கண்டிமண்ணில்
நிறைவினை யுற்றஎங்கள்
நேசராம் யோசேப்வாசின்
மறைபணி முதலாம்பாகம்
முற்றிய விதமிதுதான்

– வளரும் –

## பாரம்பரிய பாஸ்கா நாடகம்


ஜேர்மனி நாட்டிலுள்ள ஒபரமேர்கா கிராமத்தில் கடந்த ஆண்டு மே 15 முதல் அக்டோபர் 03 வரையிலான காலப்பகுதியில் உலகப் பிரசித்தி பெற்ற திருப்பாடுகளின் காட்சி (பாஸ்கா நாடகம்) மேடையேற்றப்பட்டது. 1634ம் ஆண்டு முதல் ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக் கொருமுறை இந்நிகழ்வு மேடையேற்றப்படுகின்றது. அக்காலப்பகுதியில் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் இந்நிகழ்வுகளைக் கண்டுகளிக்கின்றார்கள்.

**வரலாறு:**

இப்பாஸ்கா நாடகமானது ஒபரமேர்கா பங்கு ஆலயத்தில் சமய, ஆன்மீக நிகழ்வாக ஆரம்பிக்கப்பட்டது. 30 ஆண்டுகள் தொடர்ந்த கத்தோலிக்க - கிறிஸ்தவ சர்ச்சையானது பவேரியா (Bavaria) பகுதியினை மிகவும் மோசமாகத் தாக்கியது. மேலும் பவேரியாப் பகுதி கொடிய தொற்று வியாதியினாலும் பாதிக்கப்பட்டது. அதன் காரணமாக பெருவாரியான ஒபரமேர்கா மக்கள் இறந்து போனார்கள். இவ்வாறான கொடிய மரணவேளையில் கிராம மக்கள் ஒன்றுகூடி கடவுள் முன்பாக எடுத்த வாக்குறுதி என்னவெனில் “எங்களைக் கடவுள் இதனின்று காப்பாற்றினால் ஒவ்வொரு பத்தாண்டுக்கு ஒருமுறை ஒரு நாடகத்தை மேடையேற்றுவோம்” என்பதாகும். அதன் பிற்பாடு தங்களது வாக்குறுதிக்கமைவாக இயேசுவின் வாழ்க்கை வரலாற்றினை (பாடுகள், மரணம், உயிர்ப்பினை) மேடையேற்றத் தொடங்கினார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் மத்தியில் கொடிய வியாதியினால் மரணிப்போரின் எண்ணிக்கை குறைவடையத் தொடங்கியது.

18ம் நூற்றாண்டளவில் இம்மேடை நாடகமானது பிரபல்யம் அடையத் தொடங்கியது. அதன் காரணமாக ஐரோப்பாவின் பல்வேறு





"வழக்கு ஒத்திப் போட்டிருக்காங்க"

"அடுத்த தவண எப்ப?"

"3010 டிசம்பர் மாதம் 16ம் திகதி"

• மணி

பகுதிகளிலிருந்தும் மக்கள் அதனைப் பார்வையிடுவதற்காக வரத் தொடங்கினார்கள். 1980ம் ஆண்டு காட்சியினை ஜேர்மனி நாட்டு அதிபர் ஹிட்லர் பார்வையிட்டார். 1980ம் ஆண்டில் ஜேர்மனி சான்சலர் (Chanceller) கொன்ராட் அடனுகர் பார்வையிட்டார். இவ்வாறு பலர் இதன்பால் ஈர்க்கப்பட்டனர்.

**அழகிய மேடையமைப்பு**

காலஞ் செல்லச் செல்ல பங்கு ஆலய அமைவிடம் நாடகத்தை மேடையேற்றுவதற்குப் போதுமானதாகக் காணப்படவில்லை. எனவே, ஆலய சேமக்காலை வளவை அந்நிகழ்வினை நடத்துவதற்குத் தெரிந்துகொண்டார்கள். சேமக்காலையிலும் இடவசதி அற்றுப்போகவே 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரு புதிய இடம் கிராமத்தில் இதற்கெனக் கண்டுபிடிக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் மேடையமைப்புகள் புதிது புதிதாக வடிவமைக்கப்பட்டன. இதற்கான கலையரங்கானது கடந்த நூற்றாண்டிலே பெரிதாக வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. 1990ம் ஆண்டு மேடையேற்றப்பட்ட நாடகத்தைத் தொடர்ந்து அரங்கத்தின் உள்ளக, வெளியக அமைப்பு முறைகள் புதுப்பிக்கப்பட்டு, நவீன தொழில்நுட்பத்துடன் புனருத்தாரணம் செய்யப்பட்டது. இன்றுள்ள அரங்கத்தில் சுமார் 5000 பேர் வரையிலான பார்வையாளர்களுக்கு இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.



**உள்ளூர்க் கலைஞர்கள்**

நாடகத்தின் அடிப்படைக் கதை 1500களில் எழுதப்பட்ட வடிவமே இன்றும் தேவையான, காலத்திற்குத் தகுந்த மாற்றங்களுடன் பின்பற்றப்படுகின்றது. கடந்த வருட நிகழ்வில் நாடகக்காரர்கள், இசையமைப்பாளர்கள், மேடைத் தொழில்நுட்பவியலாளர்களென 2000 வரையிலான உள்ளூர்க் கலைஞர்கள் ஈடுபட்டிருந்தனர். ஒவ்வொரு நிகழ்வும் ஐந்து மணிநேரம் கொண்டவை. அவை இரண்டரை மணிநேரம் கொண்ட இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முற்பகுதி பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.00 மணிக்கு நிறைவுறும். இரண்டாம் பகுதி இரவு 8.00 மணிக்கு ஆரம்பாமாகி இரவு 10.30 மணிக்கு முடிவுறும்.

இந்நாடகமானது உரையாடல்கள் கொண்ட காட்சிகளையும், இசை வடிவம் கொண்ட காட்சிகளையும், பின்னணிப் பாடல் கொண்ட காட்சிகளையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பழைய ஏற்பாட்டுக் காட்சிகள் அசைவற்ற காட்சிகளோடு இணைந்து வாய்மொழிக் காட்சிகளால் விளக்கப் படுகின்றன. கடந்த வருட நாடகத்தில் நூற்றியிரண்டு

# சரித்திரம் திரும்புகிறதா...?


பண்டைக் காலத்தில் நீதிமன்றங்கள் இல்லை
மகாராஜாவே குற்றங்களை விசாரிப்பார்
அவர் வைத்ததுதான் சட்டம்
சட்டத்தரணியுமில்லை, ஜூரியுமில்லை
மரணதண்டனை, சிறைத்தண்டனை
எல்லாம் அவரே வழங்குவார்
அவர் தீர்ப்புக்கு அப்பீல் இல்லை
தளபதிகள் சிறையில் அடைக்கப்படுவார்கள்
அவ்வாறே சூழ்ச்சிகளின் மூலம்
மன்னரும் சிறையில் அடைக்கப்படுவார்
இந்தக் கதையை நாம் தினமும்
சினிமாவில் பார்க்கிறோம் அல்லவா?
அத்தகைய வரலாறு திரும்புகிறதா?
மன்னருடன் சில ஆமாம்சாமிகள் இருப்பார்கள்
அவர்கள் மன்னரை எதிர்த்து
ஒரு வார்த்தை பேசமாட்டார்கள்
பலநூறு வருடங்கள் கழிந்தபின்
மன்னரின் சர்வாதிகாரத்துக்கு எதிராக
மக்கள் திரண்டெழுந்தனர்
பிரான்சிய புரட்சி அத்தகைய வரலாறு
அந்த மக்கள் எழுச்சியில்
பதினாலாம் லூயி மன்னன் கொல்லப்பட்டான்
மன்னனுக்குத் துணைபோன பலர்
மக்களால் கொல்லப்பட்டனர்
மக்களைக் கண்டு அதிகாரிகள்
ஓடி ஒழித்தனர் மக்கள் அவர்களைத்
தேடித் தேடிக் கொலை செய்தனர்
இன்னும் பல வருடங்களுக்குப் பின்
ஹிட்லர், முசொலினி, அயூப்கான்,
இடிஅமீன் போன்றோர் மக்களால்
தோற்கடிக்கப்பட்டனர் இது வரலாறு

தமிழன்பன்

காட்சிகள் மேடையேற்றப்பட்டன. இவற்றில் 130 சிறார்கள், 1800 வளர்ந்தோர் அடங்கலாக 2500 வரையிலான கலைஞர்கள் பங்கேற்று நடித்தார்கள். ஒபரமேர்கா கிராமத்தின் சனத்தொகையே 5000 பேராக இருக்க கிராமத்தின் அரைவாசிப்பேர் இதில் நடிக்கிறார்கள் என்பது ஆச்சரியமானது. கலைஞருக்கான நாடகப் பாத்திரங்கள் 2009 ஏப்ரல் மாதம் வழங்கப்பட்டன. பிரதான கதாபாத்திரங்களை ஏற்று நடிப்பவர்களுக்கு கிராமத்து மேயரின் கட்டளைப்படி நீண்ட முடி வளர்க்கவும், அடர்த்தியான தாடி வளர்க்கவும் கோரப்பட்டது. இந்த நாடகத்தில் இயேசுக்கிறிஸ்துவின் பாத்திரமேற்று நடிக்கும் பிரட்ரிக் மேயட் (Fredrick Mayet) என்பார் கூறுகையில் 'இது மிகவும் அற்புதமான அனுபவம்' என்கிறார்.

1633ம் ஆண்டில் தங்கள் முன்னோர் கடவுளுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கொப்ப இதில் பங்கேற்கும் அனைத்துக் கலைஞர்களும் எந்தவிதமான சம்பளமோ, சன்மானமோ பெற்றுக்கொள்ளாமல் இதனைத் தங்களது கடமையாகவே உணர்ந்து ஒபரமேர்கா மக்கள் இன்றுவரை செய்து வருகிறார்கள். நீண்டகால பாரம்பரியத்தைக்கொண்ட இக்கலை வடிவம் தொடர்ந்து வருங்காலத்திலும் நடைபெற எம் வாழ்த்துகள்

• **அருட்தந்தை A.A.நவரெட்ணம்**
**விரிவுரையாளர்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**



"எல்லா வேட்பாளர்களும் பணம் கொடுத்தாங்க"


"அப்ப யாருக்கு வோட் போடப்போறா?"

"யாருக்கும் போடமாட்டன். கிடைச்ச காசெல்லாம் பேங்கில போட்டுத்து, அடுத்த தடவ நானே வோட்டுக் கேப்பன்"

• மணி

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## ஹலாசனம்



### செய்முறை

- விரிப்பின் மீது கால்களை நீட்டிப் படுக்கவும்.
- இரண்டு கால்களையும் ஒன்றுசேர்த்து உள்ளங் கைகளைப் பூமியின் மீது அழுத்தி இடுப்பை உயர்த்தி கால்களைப் பின்புறமாகக் கொண்டு வரவும்.
- சிறிது சிறிதாக முயற்சித்து உடல்களை முன்னோக்கி நகர்த்தி கால் கட்டை விரல்களைத் தரையின் மீது வைக்கவும்.
- கால்களை மடிக்காது நீட்டி வைக்கவும்.
- உடல் எடை முழுவதையும் தோள் பட்டைகளில் வைக்கவும்.
- ஆசன நிலையில் இயல்பான சுவாசத்தில் இருக்கவேண்டும்.
- 06 தொடக்கம் 30 வினாடிகள் வரை இருக்கவும்.
- 03 தொடக்கம் 06 தடவைகள் செய்யலாம்.
- உள்ளங்கையால் பூமியை அழுத்தி கால் விரல்களைப் பூமியிலிருந்து பிரித்து கால்களை உயர்த்தவும். பின் மெதுவாக விரிப்பின்மீது படுத்து கால்களைத் தரையை நோக்கிக் கொண்டுவந்து ஓய்வு எடுக்கவும்.

### இதனால் ஏற்படும் பலன்கள்

- உடலின் எல்லாப் பாகங்களுக்கும் இரத்தம் சீராகப் பாய்ந்து இளமையைத் தருகின்றது.
- சுறுசுறுப்பாக இருக்கலாம்.
- முதுமை மறைந்து உடல் இளமையுடன், ஆரோக்கியத்துடன் இருக்கிறது.
- மனம் பக்குவப்படுகிறது.
- முகப் பொலிவு ஏற்படுகிறது.

### இதனால் தீரும் நோய்கள்

- சிறுநீரகக் கோளாறுகள் குணமாகும்.
- உடல் எடை குறையும், தொப்பை கரையும்.
- மலச்சிக்கலை நீக்கி வாயுக்கோளாறுகளைச் சரி செய்கிறது.
- நரம்புத் தளர்ச்சியைப் போக்குகின்றது. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும்.
- மூல நோய்கள் குணமாகும். ஆண்மையின்மை நோயைச் சரி செய்கிறது.

### குறிப்பு

- அடிமுதுகுவலி, கழுத்துவலி, முதுகுவலி, இரத்த அழுத்தம் ஆகிய கோளாறுகள் உள்ளவர்கள் இவ்வாசனத்தைத் தவிர்க்கவும்.

### மாற்று ஆசனங்கள்

- பிறையாசனம், சக்கராசனம், தனுராசனம்

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)

# யுத்தத்தின் சத்தங்கள்தான் இல்லை! யுத்தகால அவலங்கள் இன்னும் தொடர்கின்றன!

– தேசிய சமாதானப் பேரவை விழாவில் தமிழ் நேசன் அடிகளார்

யுத்தம் முடிவடைந்துவிட்டது என்று சொல்லப்பட்டாலும் சண்டை மட்டுந்தான் முடிவடைந்துள்ளது. யுத்தத்தின் சத்தங்கள்தான் இப்போது இல்லை. துப்பாக்கி வேட்டுகளின் சத்தம்தான் இப்போது ஓய்ந்துள்ளது. யுத்த காலத்தில் இருந்த கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், பயம், பதட்டம் போன்ற நிலைமைகள் வடகிழக்கில் இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இந்த நிலைமை மாறவேண்டும். அனைத்து மக்களும் அச்சமற்ற ஒரு சூழ்நிலையில் அமைதியோடு வாழக்கூடிய நல்லாட்சி இந்நாட்டில் நிலைபெற வேண்டும் என தேசிய சர்வமத பேரவை உறுப்பினரும், மன்னார் மறைமாவட்டக் குருவும் மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவருமான அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.



கடந்த பெப்ரவரி மாதம் 28ம் திகதி கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற மனித உரிமைகள் செயற்பாட்டாளரான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அவர்களுக்கு சமாதான விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு கிறிஸ்தவ சமயத் தலைவர்கள் சார்பாக உரை நிகழ்த்தும்போதே தமிழ் நேசன் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார். தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்விருது வழங்கும் விழாவிற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா மற்றும் பல வெளிநாட்டுத் தூதுவர்கள் வருகைதந்திருந்தனர்.



அங்கு பேசிய தமிழ் நேசன் அடிகளார் தொடர்ந்து கூறியதாவது, சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர் அவர்கள் கடவுளைக் காண்பர் என்றார் இயேசுபிரான். யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த மிகவும் கடினமான, சவால் நிறைந்த காலத்தில் சமாதானத்திற்காக குரல்கொடுத்து சமாதானத்திற்காக உழைத்த திரு. பாக்கியசோதி சரவணமுத்து அவர்களுக்கு இன்று சமாதான விருது வழங்கப்படுவதையிட்டு நாம் மகிவும் மகிழ்ச்சியடைகின்றோம். அவருக்கு எமது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.



இந்த முக்கியமான நல்ல சந்தர்ப்பத்திலே வடகிழக்கு மக்கள் சார்பாக சில முக்கிய விடயங்களை நான் முன்வைக்க விழைகின்றேன். யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. மீள்குடியேற்றப்பட்ட மக்களுடைய நலன்கள் கவனத்தில் எடுக்கப்படாத நிலைமை உள்ளது. உதவி நிறுவனங்கள் சுதந்திரமாக வன்னிப் பகுதிக்குள் சென்று தமது வேலைத்திட்டங்களை செய்ய முடியாத நிலை உள்ளது. அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக இந்த நிறுவனங்கள் வழியாக பாதிக்கப்பட்ட மக்கள் பெறக்கூடிய பல நன்மைகள் தடைசெய்யப்பட்டுள்ளன. இந்த நிலைமை மிகவும் கவலைக்குரியதாகும்.

யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்கபடத்தான் வேண்டும். அது நல்லது. ஆனால் அதைவிட முக்கியமான விடயம் ஏன் யுத்தம் ஏற்பட்டது என்ற கேள்விக்கான பதிலை நாம் கண்டுபிடிக்க வேண்டும். தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட காரணத்தால்தான் இந்த நாட்டில் யுத்தம் ஏற்பட்டது. எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் இதுவரை முன்வைக்கப்படவில்லை. யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களாகியும் தமிழ் மக்களுக்குரிய

அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கின்ற முயற்சிகள் முன்னெடுக்கப்படாதது தமிழ் மக்கள் மத்தியில் பெரிய ஏமாற்றத்தை தருகின்றது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துச் சமூகங்களும் மனபாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன. இந்நிலையில் மனக்காயங்கள் ஆற்றப்படவேண்டும்; சமாதானத்தை, ஒப்புரவை ஏற்படுத்த வேண்டும்; நடந்த தவறுகளுக்காக ஒருவரை ஒருவர் மன்னிக்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இந்த இனப்பிரச்சினைக்கான தீர்வை நாம் அரசியல்வாதிகளிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. அரசியல்வாதிகள் அரசியல்வாதிகள்தான். அவர்களுக்கே உரிய சில குறுகிய நோக்கங்களின் அடிப்படையில்தான் அவர்கள் செயற்படுவார்கள். யுத்தத்திற்குக் காரணமாக இருந்த இனப்பிரச்சினைக்கான தீர்வை மக்களிடமிருந்து கொண்டுவருவதற்கு தேசிய சமாதானப் பேரவையும் தேசிய சர்வமத பேரவையும் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

# கடுகுக் கதை 32 தலைமுறைத் தவறுகள்


அன்ரன் வீட்டிற்கு அந்தச் சிங்களக் குடும்பம் திடீரென்று வந்திறங்கியமையால் அன்ரன் வேலை விடுப்பு எடுக்கவேண்டியதாயிற்று. உண்மையில் அவர்கள் யாரென்றே அன்ரனுக்குத் தெரியாது. அவர்களாகவே வீட்டைத் தேடி வந்துவிட்டார்கள். தங்களையும் அறிமுகஞ் செய்துகொண்டார்கள். 60 வயது மதிக்கத்தக்க தகப்பனாரும் அவருடைய மனைவியும் 25 வயது மதிப்பிடக்கூடிய அவர்களின் மகனுமாக மூவர் கொண்ட குடும்பம்.

"உங்கட மகன் எங்களுக்குப் பெரிய உதவி செய்தவர்" என்று சிங்களத்தில் பெரியவர் சொன்னார். அன்ரனின் மூத்தமகன் கொழும்பில் வேலை பார்க்கிறான்.

"என்ட மகன் விபத்தில காயப்பட்ட நேரம் உங்கட மகன்தான் 'ஓ பொசிடிவ்' இரத்தம் கொடுத்து என்ட மகனக் காப்பாத்தினவர். தன்ட அப்பா வளத்த வளப்புத்தான் உதவி செய்யிற மனத்துக்குக் காரணம் எண்டு சொன்னவர். அதான் அந்த அப்பாவப் பார்க்க என்ட மகனக் கூட்டி வந்தன்" என்றார் பெரியவர்.

சுவரில் கொழுவப்பட்டிருந்த அன்ரனின் தகப்பனாரின் புகைப்படத்தைப் பார்த்த அவர், அன்ரனிடம் "இவர் யார்?" என்று கேட்டார்.

"என்னுடைய தகப்பனார். 83ம் ஆண்டுக் கலவரத்தில அனுராதபுரத்தில வைத்துக் கொல்லப்பட்டவர்" என்று அன்ரன் மெதுவாகச் சொன்னார். உடனே பெரியவரின் மகன் அன்ரனின் காலில் விழுந்து அழுதுகொண்டே சொன்னான்



"அவங்களுக்காக நான் உங்களிட்ட மன்னிப்புக் கேட்டுக்கொள்றன். தமிழாக்கள் இவ்வளவு நல்லவங்க எண்டு எனக்குத் தெரியாது. நாங்க பிறந்து, வளந்து, படிச்சது எல்லாம் தனிச் சிங்கள ஏரியாவிலதான். எங்கட அரசியல் தலைவர்கள் எங்களப் பிழையா வழிநடத்திப்போட்டாங்க. மன்னியுங்க..."

அன்ரன் அவ்விளைஞனை மெதுவாக எழுப்பி கண்ணீரைத் துடைத்துவிட்டார். வெளியில் அவனிடம் சொல்லமுடியாத விடயத்தை மனதிற்குள் நினைத்துக்கொண்டார்.


"எங்கட தலைவர்களும் எங்கள சிங்களம் படிக்க விடல்ல. ஆனா அவங்கட பிள்ளைகளுக்கு சிங்களமும் படிப்பிச்சு, வெளிநாட்டிலும் படிப்பிச்சவங்க..."

- பற்றி

பேரருட்தந்தை பொன்னையா யோசப் ஆண்டகை



## ஒரு திருச்சபையா? பல திருச்சபைகளா?



# இன்றைய உலகில் திருச்சபையைப் புரிந்துகொள்வது எங்ஙனம்?


திருச்சபை என்பது இயேசுக் கிறிஸ்துவின் சீடர்களது சமூகம். அது என்றோ வாழ்ந்து மறைந்துவிட்ட இயேசுவின் வெறும் நினைவை மட்டும் வைத்து வாழும் சமூகம் அன்று. மாறாக உயிர்த்தெழுந்த இயேசுவே அதன் உயிர்த்துடிப்பு, உள்ளியக்கச் சக்தி, என்றும் இயேசு அதன் உடனிருக்கிறார்; தம் ஆவியின் வழியாக அதனைத் தொடர்ந்து வழிநடத்தி வருகிறார். எனவே, திருச்சபை உயிரற்ற ஓர் அமைப்பு அன்று. மாறாக அது வாழும் ஒரு சமூகம், வளரும் ஓர் இயக்கம்.

இயேசு வரலாற்றில் வாழ்ந்த காலத்தில் புதிய ஒரு சமயத்தைத் துவக்கவில்லை; அவர் துவக்கியது ஒரு மக்கள் இயக்கத்தை. இயேசுவும் திருத்தூதர்களும் அதன் முதல் உறுப்பினர்கள், முழுநேரப் பணியாளர்கள். ஊர் ஊராகச் சென்று இறையரசின் நற்செய்தியை அறிவிப்பதும் அதற்கேற்ப மக்களை வாழ அழைப்பதுமே அவர்களது பணி. அந்த இயக்கத்தில் முழுநேரப் பணியாளர்களாகச் சில பெண்களும் இருந்தனர். லூக்கா நற்செய்தியாளர் கூறுவதுபோல "இயேசு நகர் நகராய், ஊருராய்ச் சென்று இறையாட்சி பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றி வந்தார். பன்னிருவரும் அவருடன் இருந்தனர்....... மேலும் பல பெண்களும் அவரோடு இருந்தார்கள்" (லூக் 8:1-3).

இறையரசே அதன் இலட்சியம். இறையரசு என்பது இறைவனையும் மனிதனையும் சார்ந்தது. அது இறைவனின் அரசு அல்லது ஆட்சி நடைபெறும் நிலை. மாந்தரின் நல்வாழ்வுக்கு என அவர் கண்ட கனவெல்லாம், வகுத்த திட்டமெல்லாம் நிறைவுறும் நிலையே அது. இறைவனே மாந்தரின் தந்தை. மக்கள் எல்லாரும் துன்ப துயரங்கள் நீங்கி அநீதிகள், அடிமைத்தனங்கள் ஒழிந்து மாண்புடனும் மகிழ்வுடனும் இருப்பதே அவரது திருவுளம். மக்கள் எல்லோரும் ஆதிக்கமும் அடுத்தவரைச் சுரண்டலும் இன்றி, ஏற்றத் தாழ்வுகளும் எவ்வகைப் பிளவுகளும் இன்றி சகோதர உறவுகளுடனும் சமத்துவ உரிமையுடனும் வாழ்ந்து நிறைவு காணவேண்டும் என்பதே அவரது திட்டம்.

இயேசுக் கிறிஸ்துவே முதன்முதலில் திருச்சபையைத் தொடங்கிவைத்தார். நற்செய்தியை அறிவித்து பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு 'திருத்தூதர்' எனப் பெயரிட்டு உலகெங்கும் நற்செய்தியை அறிவிக்கும் தூதுவர்களாக அனுப்பிவைக்க அவர்களைத் தயார் செய்தார். அவர்களே அவரது பிரிக்க முடியாத தோழர்களாக, அவரது அற்புதங்களுக்கும் உயிர்ப்புக்கும் சாட்சிகளாகச் செயல்பட்டனர். தான் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் திருச்சபையை நிறுவுவதன் அடையாளமாக சீமோன் பேதுருவை அதன் தலைவராக ஏற்படுத்தி, தந்தையிடமிருந்து தான் பெற்றுக்கொண்ட அதிகாரத்தை வழங்கினார். "உன் பெயர் பாறை; இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். மண்ணுலகில் நீ தடை செய்வது விண்ணுலகிலும் தடை செய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" (மத் 16:18). தாம் உயிர்த்த பின் "என் ஆடுகளைப் பேணி வளர்" (யோவா 21:17) எனக் கூறி அவர்தம் பணியை மேலும்

# அவுஸ்திரேலியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் திருத்தந்தை நிதியுதவி



அவுஸ்திரேலியாவின் குவின்ஸ்லாந்து மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுடன் தன் ஒருமைப்பாட்டை அறிவித்த திருத்தந்தை, அவர்களுக்கு உதவும் நோக்குடன் 50 ஆயிரம் டொலர்களையும் அனுப்பியுள்ளதாக அவுஸ்திரேலியாவுக்கான வத்திக்கான் தூதர் பேராயர் ஜூசப்பே லாசரோத்தோ அறிவித்தார்.

உறுதிப்படுத்தினார்.

பெந்தக்கோஸ்தே திருநாளன்று திருச்சபையின் பிறந்தநாளாகக் காணப்படுகிறது. ஏனெனில் இயேசு வாக்களித்ததன்படி தூய ஆவியானவர் எல்லார் மேலும் வந்திறங்கினார். (தி.ப 2:1FF). தொடக்க காலத் திருச்சபையின் வாழ்க்கை முறையையும் இரத்தினச் சுருக்கமாக லூக்கா எழுதியுள்ளார். "அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்" (தி.ப 2:42)

இயேசுக் கிறிஸ்து ஒரேயொரு திருச்சபையை மட்டும் நிறுவினார். ஆனால், அதன் வளர்ச்சிப் பயணத்தில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட பிரிவுகளாலும், பிளவுகளாலும் பலரும் பலவிதமாகப் பிரிந்து சென்று பல்வேறுபட்ட திருச்சபைகளை உருவாக்கிக்கொண்டதால் தாய்த் திருச்சபையானது தனது நம்பிக்கைப் பிரமாணிக்கத்தில் ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம் ஆகிய பண்புகளை அறிக்கையிடத் தொடங்கியது. இவை கிறிஸ்தவ ஒன்றிப்பிற்குத் தடைக்கற்களாகவே அமைந்தன. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து திருச்சபையின் சிந்தனையிலே பாரிய மாற்றம் ஏற்படத் தொடங்கியது. பிரிவுகளை முதன்மைப்படுத்தி, விவாதங்களை விரிவுபடுத்துவதைத் தவிர்த்து ஒன்றிப்பை வளர்க்கும் ஒற்றுமைப் பண்புகளை இனங்கண்டு பாராட்டுவதே சிறந்த வழி.

பிரிந்து சென்ற சபைகள் ஒரே கத்தோலிக்கத் திருச்சபை என்ற நம்பிக்கையை ஏற்காவிட்டாலும், பேதுருவின் வழி வருபவரிடம் ஒன்றித்து உறவு கொண்டிராவிட்டாலும், இவர்களோடு பல வழிகளில் தான் இணைக்கப்பட்டிருப்பதைத் திருச்சபை உணர்கிறது. அவர்களில் பலர் விவிலியத்தை ஏற்கின்றனர். ஒருசில அருளடையாளங்களை ஏற்கின்றனர். பலர் நற்கருணைப் பலியை நிறைவேற்றுகின்றனர். எல்லோரும் நற்செய்தி அறிவிப்பிலே ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். தூய ஆவியில் உண்மையான ஒரு முறையில் திருச்சபையோடு ஒன்றித்திருக்கின்றனர். "அவர்கள் ஒன்றாய் இருப்பார்களாக" (யோவா 17:21) என்று இயேசு செபித்ததைப் போன்று தாய்த் திருச்சபையும் கிறிஸ்துவின் உள்ளத்திற்கேற்ப அனைவரும் ஒன்று சேர்வதற்காக இறைவேண்டல் செய்யவும், எதிர்நோக்கவும், செயலாற்றவும் ஒருபோதும் தவறுவதில்லை (திருச்சபை - 15)

- தொடரும் -

## குறும்(புப்)பா - 57



பொங்கியது மலைபோலே அலைகள்
போர்க்காலக் கொடுமையது போலே
எங்கனுமே அழிவுபெரும் அவலமிடி பாடியற்கை
ஏன்கோபங் கொண்டாய்ஜப் பானில்?

– மலர் –




இம்முறை தொண்டனின் சில நிமிடங்களுக்காக மூன்று இளம் சாரணர்களைச் சந்தித்தோம். ஜெகநாதன் சிந்துஜன், பற்குணலிங்கம் தினேஸ், ஏரம்பமூர்த்தி வேணுஜன் ஆகியோரே அவர்கள்.

இவர்கள் மூவரும் பெப்ரவரி 14ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை இடம்பெற்ற 'ஐக்கியத்துக்கான சாரணர் சைக்கிள் பேரணி'யில் கலந்துகொண்டிருந்தார்கள். இப்பேரணி பருத்தித்துறையில் இருந்து ஆரம்பித்து மாத்தறையின் தேவேந்திரமுனையில் நிறைவடைந்தது.

முன்னைய இரு சாரணர்களும் க.பொ.த உயர்தரம் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் என்பதுடன் 'ஜனாதிபதி சாரண' சின்னம் பெற்றவர்கள். மற்றையவரான வேணுஜன் 2012ம் ஆண்டில் உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ளவர். அவர் சாரண ஆணையாளர் சின்னம் பெற்றவர். இவர்கள் மூவர் மட்டுமே கிழக்கு மாகாணத்தில் இருந்து இச்சைக்கிள் பேரணியில் கலந்துகொள்ள தெரிவுசெய்யப்பட்டவர்கள் என்பதுடன் இவர்கள் மூவரும் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் புதல்வர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.


இச்சைக்கிள் பேரணி தொடர்பாக இவர்களிடம் நாம் கலந்துரையாடினோம். இவர்கள் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்திய தகுதிப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர். அதில் இவர்களின் உடல்தகுதி உறுதிப்படுத்தப்பட்டதனால் பேரணியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் மூவரும் தங்கள் சாரண ஆசிரியர் திரு.வி.பத்மநாதன் அவர்களுடன் பெப்ரவரி 12ம் திகதி வவுனியா ரயில்நிலையத்தைச் சென்றடைந்தனர். அங்கு ஏனைய மாகாண சாரணர்களும் வந்தடைந்தபின்னர் அவர்கள் அனைவரும் முப்படையினரது பஸ் வண்டிகளில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

பெப்ரவரி 13ம் திகதி இவர்கள் அனைவருக்குமான பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்பட்டது. அங்கும் இவர்கள் அனைவரும் மீண்டும் ஒரு மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

அன்று அனைவருக்கும் புத்தம் புதிய சைக்கிள் வண்டிகள் வழங்கப்பட்டன. மறுநாள் 14ம் திகதி காலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இருந்து புதிய சைக்கிள் வண்டிகளில் பருத்தித்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சுமார் காலை 7.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் யாழ்ப்பாணம் பொதுநூலக முன்றலைச் சென்றடைந்தனர். அங்கிருந்து பேரணியானது சர்வமத வழிபாடுகளுடன் காலை 10.30 மணியளவில் மீண்டும் ஆரம்பமானது. பிரதம சாரண ஆணையாளர் திரு சந்திரசேன பட்டுமங்கல, தலைமையக உதவி ஆணையாளர் திரு பிரபாத் குலரத்ன (பேரணி அமைப்பாளர்) ஆகியோருடன் யாழ் கட்டளைத் தளபதி ஆகியோர் பேரணியை ஆரம்பித்து வைத்தனர்.





# கி.பி. யூதாஸ்

ஏசு
உயிர்த்தெழுந்தாரோ
இல்லையோ
யூதாஸ்
உயிர்த்தெழுந்துவிட்டான்

அவன் கல்லறையில்
புதைக்கப்பட்டது
அவன் மனச்சாட்சி மட்டுமே

யூதாஸ்
உயிர்த்தெழுந்துவிட்டான்

ஒவ்வொரு ஏசுவின் வருகைக்கும்
அவன் ஆவலோடு
காத்திருக்கிறான்

ஏனெனில்
அவன் விற்பதற்கு
ஏசுவின் ரத்தம் வேண்டும்

அவன்
வெளியில் நிற்பதில்லை
பன்னிரண்டு பேர்களில்தான்
அவன் இருப்பான்

இப்பொழுதெல்லாம்
ஏசுவின் ரத்தம் மட்டுமல்ல
தாயின் முந்தானையையும்
விற்பதற்கு
அவன் தயங்குவதில்லை

அவனுக்கு வேண்டியதெல்லாம்
முப்பது வெள்ளிக் காசுகள்

இரத்தக் கிரயமான
காசுகள் என்றாலும்
அவற்றில்
இரத்த வாடை
அடிப்பதில்லை

காசுகளை அவன்
தேவாலயத்தில்
விட்டெறிவதில்லை

அவற்றால்
தேவாலயங்களை
விலைக்கு வாங்கிவிடுகிறான்

ஆனால்
அவன் வாங்கிய இடத்தை
யாரும்
'இரத்த நிலம்' என்று
அழைப்பதில்லை

**– அப்துல் ரகுமான்**

நூற்றிப்பதின்மூன்று சாரணர்கள் இப்பேரணியில் இணைந்திருந்தனர். மீசாலையில் பகல் உணவு வழங்கப்பட்டது. பிற்பகல் 6.00 மணியளவில் கிளிநொச்சியைச் சென்றடைந்தனர். அன்றிரவு இசை நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது. பின்னர் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் தங்கினர்.

"உங்கள் உடைமைகளையும் சைக்கிளில் எடுத்துச் சென்றீர்களா?" என்று நாம் சிந்துஜனிடம் வினவினோம். அதற்கு அவர் "இல்லையில்லை... எமக்குப் பின்னால் மூன்று பஸ் வண்டிகளில் எமது பிரயாணப் பைகளும் தொடர்ந்து கொள்கலனொன்றும் வந்தது. அதில் இன்னும் சில சைக்கிள்களும், சைக்கிள் திருத்தும் குழுவொன்றும் வந்தது. இதனைத் தவிர பாதுகாப்பிற்காக அம்புலன்ஸ் வண்டியொன்றும், போக்குவரத்துப் பொலிசாரின் வாகனங்களும் தொடராக வந்தன" என்றார்.

15ம் திகதி காலை கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட சைக்கிள் பேரணி ஓமந்தையூடாக அன்று பிற்பகல் வவுனியா சென்றடைந்தது. அங்குள்ள பாடசாலையொன்றில் தங்கவைக்கப்பட்டனர். தங்கவைக்கும் ஒவ்வொரு இரவுகளிலும் இசைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அத்துடன் சாரண தீப்பாசறைகளும் நடத்தப்பட்டன.

பெப்ரவரி 16ம் திகதி காலை வவுனியாவில் இருந்து புறப்பட்டு மாலை 5.00 மணியளவில் அனுராதபுரத்தைச் சென்றடைந்த பேரணி புனித தோமஸ் கல்லூரியில் இரவு தங்கியது.

மறுநாள் காலை அனுராதபுரத்தில் இருந்து ஆரம்பித்து தம்புள்ள வழியாக மாத்தளையைச் சென்றடைந்த சாரணர்கள்

மாத்தளை கிறிஸ்தவ கல்லூரியில் தங்கினர். இலங்கையில் முதன்முதலாக 'சாரணர்' அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட இடம் மாத்தளை கிறிஸ்தவக் கல்லூரி என்பதை தினேஸ் எமக்குச் சுட்டிக் காட்டினார்.

அடுத்தநாள் அதிகாலை அங்கிருந்து புறப்பட்டு கண்டி கேகாலையூடாக நிட்டம்புவ என்னும் இடத்தைச் சென்றடைந்தனர். அன்றைய தினம் நீண்ட பயணமாக இருந்தது. இரவு 8.30 மணியளவில் நிட்டம்புவ சென்றடைந்தது பேரணி.

பெப் 19ம் திகதி நிட்டம்புவவில் இருந்து புறப்பட்டு கொழும்பு வழியாக பி.ப 6.00 மணியளவில் களுத்துறையைப் பேரணி சென்றடைந்தது. இதற்கிடையில் கொழும்பில் வைத்து பழைய பாராளுமன்ற முன்றலில் முதல் பெண்மணி சிரந்தி ராஜபக்ஷ தலைமையில் வரவேற்பு வழங்கப்பட்டது.

மறுநாள் காலை (20ம் திகதி) களுத்துறையில் இருந்து புறப்பட்டு அம்பலாங்கொடை வழியாக காலியைச் சென்றடைந்த குழுவினர் மீண்டும் அடுத்தநாள் 21ம் திகதி பயணத்தை ஆரம்பித்து மாத்தறையை அடைந்தனர்.

பேரணியின் இறுதிநாள் பெப்ரவரி 22ம் திகதியாகும். அன்று சாரணர் அமைப்பின் ஸ்தாபகர் பேடன் பவுலின் பிறந்தநாளுமாகும். அன்று காலை 9.00 மணியளவில் மாத்தறையில் இருந்து ஆரம்பித்த பேரணி 4 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தேவேந்திரமுனை சென்றடைந்து சுமார் 9 நாள் பயணத்தை நிறைவு செய்தது.

அன்றைய தினம் சாரணர்கள் பயன்படுத்திய புத்தம் புதிய சைக்கிள்கள் அனைத்தும் அவர்களுக்கே அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இப்பேரணி மூலம் பெற்ற அனுபவங்களினை எமது சாரணர்கள் மூவரும் பட்டியலிட்டனர்.

01. புதிய அனுபவம்
02. பல இடங்களையும் பார்வையிட முடிந்தமை
03. பல இன சாரணர்களுடன் பழக நேரிட்டமை
04. நீண்ட நாட்கள் பங்குபற்றியமை
05. வெவ்வேறு மக்களின் உபசரிப்புகளைப் பெற்றுக் கொண்டமை
06. உண்மையான சாரண அனுபவம் பெற்றமை


அத்துடன் தங்களுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்களையும், உள்ளூர் சாரணத் தலைவர்களையும், புனித மிக்கேல் கல்லூரியையும் நன்றியுடன் அவர்கள் குறிப்பிட்டனர். இவற்றுடன் அவர்கள் பின்வரும் கருத்தையும் வாசகர்களிடம் வலியுறுத்தினர். "சாரண அமைப்பு எக்காரணம் கொண்டும் ஒரு மாணவனின் கல்வியில் பின்னடைவை ஏற்படுத்த மாட்டாது"

*சாதனை புரிந்த இச்சாரணர்களை தொண்டனின் சார்பில் வாழ்த்திப் பாராட்டி விடை பெற்றுக்கொண்டோம்.*

*மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் வைத்து இவர்கள் மாலை மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.*

## பிரெய்ல் எழுத்தில் வடிவமைக்கப்பட்ட தமிழ் புதிய ஏற்பாட்டுப் பிரதி

பார்வையற்றவர்கள் வாசிக்கப் பயன்படுத்தும் பிரெய்ல் எழுத்தில் வடிவமைக்கப்பட்ட தமிழ் புதிய ஏற்பாட்டுப் பிரதியை இந்தியாவுக்கான வத்திக்கான் தூதர் பேராயர் சால்வத்தோரே பென்னாக்கியோ வெளியிட்டார். இந்த முயற்சியானது 2006ம் ஆண்டில் பாளையங்கோட்டை இயேசுவின் திருஇதய அருட்சகோதரர்கள் சபையால் தொடங்கப்பட்டது.





# துயர் வழி தாண்டி...

சிலர் தங்களது வாழ்வில் துன்பங்களுக்கு மேல் துன்பம், சோதனைகளுக்கு மேல் சோதனை, வருத்தங்களுக்கு மேல் வருத்தம், கவலைகளுக்கு மேல் கவலை என்று அங்கலாய்த்துக் கொண்டிருப்பார்கள். வேறு சிலர் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும், சந்தோஷமாகவும், இயல்பாகவும் வாழ்ந்துகொண்டிருப்பது போலத் தோன்றும். துன்பப்படுகின்றவர்கள், துயரப்படுகின்றவர்கள் 'ஏன் நமக்கு இந்தச் சோதனை? ஏன் இந்த வேதனை?' என்று சலித்துக்கொள்வதும் உண்டு. வேறு சிலர் வேதனைகளால் துவண்டு யார் யார் மீதோ பழிதனைப் போட்டு பிரச்சினைகளுக்குக் காரணம் என்னவென்று பார்க்கப் புறப்பட்டு மேலும் மேலும் பிரச்சினைகளில் வீழ்ந்துவிடுவதும் உண்டு. இன்னும் சிலர் இதற்கு மேலும் சென்று கடவுளுக்குக் கண் இல்லையா? இப்படிச் சோதிக்கின்ற - வேதனைப்படுத்துகின்ற இவரும் ஒரு கடவுளா என்று கடவுளையே கேள்வி கேட்கப் புறப்பட்டு விடுவதும் உண்டு.

இது தொடர்பான அறிவுரை ஒன்று எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் 12ம் அதிகாரம் 5 முதல் 9 வரையான திருவசனங்களில் காணப்படுகிறது. "தம் பிள்ளைகளுடன் பேசுவதுபோல் இறைவன் உங்களுக்குத் தந்த பின்வரும் அறிவுரையை நீங்கள் மறந்துவிட்டீர்கள். பிள்ளாய் ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாம் எனத் தள்ளிவிடாதே. அவர் கண்டிக்கும்போது தளர்ந்து போகாதே" "தந்தை தாம் ஏற்றுக்கொண்ட மக்களைத் தண்டிக்கிறார். ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார்" திருத்தப்படுவதற்காகத் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள். கடவுள் உங்களைத் தம் பிள்ளையாக நடத்துகிறார். தந்தை கண்டித்துத் திருத்தாத பிள்ளை உண்டோ?

நாம் கடவுளுடைய பிள்ளைகளாய் இருப்பதால்தான் - அவர் உண்மையாகவே நமது இறை தந்தையாக இருப்பதனாலேயே நாம் தவறுகள் செய்யும்போது அவரால் கண்டிக்கப்படுகிறோம் அல்லது தண்டிக்கப்படுகிறோம் என்பது இதிலிருந்து புலனாகிறது அல்லவா? தவறு செய்வது மனித சுபாவம். இருப்பினும் தவறினைச் சரி செய்து செய்த தவறுக்காய் மனம் வருந்தி வாழ்வினை மாற்றி அமைக்கும்போது இறையன்பை நம்மால் நிச்சயம் சுவைக்கக் கூடியதாக இருக்கும் என்றும் மறைமுகமாக இப்பகுதி எடுத்தியம்பவில்லையா?

இந்த வேளையில் பாவமே செய்யாத நம் இயேசு ஆண்டவர் நம் பாவங்களுக்காகப் பாவிகள் கையில் தம்மை ஒப்புவித்தபோது அவருக்கு பாவிகளான யூதர்கள் கையால் விளைவிக்கப்பட்ட சகல துன்ப துயரங்களை எவ்வாறு சகித்துக் கொண்டார் என்று எண்ணிப் பாருங்கள். பாவமே செய்யாத அவர் தமக்கு வழங்கப்பட்ட அட்டூழியங்களைத் தாங்கி ஏற்றுக்கொண்டார் என்றால் நாம் நம் பாவங்களுக்காகக் கண்டிக்கப்படும்போது அதுவும் பரலோகத் தந்தையால் தந்தைக்குரிய பாசத்தோடு திருத்தப்படுவதற்காகக் கண்டிக்கப்படும்போது முணுமுணுக்கலாமா? மனஞ் சோர்ந்து, துவண்டு, தளர்ந்து போகலாமா?

நம் தவறுகளை உணர்ந்து திருந்திவிடும்போது, பாவ வாழ்க்கையை விட்டு எழுந்துவிடும்போது ஊதாரி மைந்தனின் தந்தை போன்று தந்தைக்குரிய பாசத்துடன் நம்மை ஏற்றுக் கொள்ளவும், நாம் இழந்ததைவிட அருள் வளத்தையும் சிறப்பான வாழ்வையும் நமக்கு அருள நம் பரலோகத் தந்தை காத்திருப்பார் என்று சொல்லிக் கொள்ளவும் வேண்டுமா?

எனவே, நமக்கு சோதனைகளும் வேதனைகளும் ஏற்பட்டிருப்பதாக சந்தேகம் வருகின்றபோது அந்த இறைதந்தையிடமே சரணடைவோம். அவரே நம் கட்டுகளை அவிழ்க்கக்கூடியவர்; அவரே நம் மனப் புண்களை மாற்றக்கூடியவர். இறைவனை நாடி இறையிரக்கத்தைப் பெற்று மகிழ்வோம்.

**- பத்திநாதன் -**




## கலாபனைகளும் திருச்சபை பரம்புதலும்

திருச்சபையானது பன்னிரு சீடர்களுடன் கடுகுமணி போல் ஆரம்பித்து, குறிப்பாகத் தூய பவுலின் தீவிர போதனையால் உலகின் பல பாகங்களிலும் பரவி வளர்சியடைந்ததைக் காணமுடிகிறது. திருத்தூதர்களின் காலத்திலேயே ஜெருசலேம், யூதேயா, சமாரியா, கலிலேயா, அந்தியோக்கியா, பம்பிலியா, கலாத்தியா, பிசிதியா, இக்கோணியா, பிலிப்பி, எபேசு, தெசலோணிக்கா, கொரிந்து, பித்தானியா, உரோமைவரை பரவியமையை திருத்தூதர்பணி நூலில் காணமுடிகிறது.

மேலும் மூன்றாம் நூற்றாண்டில் திருச்சபையானது ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, எகிப்து, கிறிஸ், இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், ஜேர்மனி, அராபியா போன்ற நாடுகளிலும் தாபிக்கப்பட்டிருந்தது. இவ்வாறாகத் திருச்சபையின் இத்துரித வளர்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தன. இவற்றில் சில

- இயேசு வாக்களித்த அவரது பிரசன்னமும் அருளும்
- பரிசுத்த ஆவியின் வருகையில் கிறிஸ்தவர்கள் பெற்றுக்கொண்ட அருங்கொடைகளும், வல்லமையும்.
- பவுலின் மனமாற்றமும், அவர் ஆற்றிய போதனைகளும்.
- இயேசுவின் பெயரால் சீடர்கள் ஆற்றிய போதனைகள்.
- ஆதிக்கிறிஸ்தவர்களின் எடுத்துக்காட்டான வாழ்வு.
- அழியா ஆன்மா, பாவ மன்னிப்பு போன்ற சத்தியங்களால் மக்களுக்குக் கிடைத்த மன ஆறுதல்.
- 2ம், 3ம் நூற்றாண்டுகளில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட மத உணர்வு, மத மறுமலர்ச்சி, கிறிஸ்தவர்களின் மதக்கொள்கை மக்களைக் கவர்ந்தது.
- உரோமைப் பேரரசின் அமைப்பு, நிர்வாக அமைப்பு, அதன் கீழ் நிலவிய அமைதி.
- அப்போஸ்தலர்களின், விசுவாசிகளின் சான்று வாழ்வு.
- கலாபனைகளில் கிறிஸ்தவர்கள் காட்டிய பொறுமை, தைரியம், மறை சாட்சிகள் சிந்திய இரத்தம் போன்றன திருச்சபையின் துரிதமான வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தன.

திருச்சபையானது முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் பல எதிர்ப்புகளுக்கும், இடையூறுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. திருச்சபைக்கு எதிராக அதற்கு வெளியிலிருந்து யூத கலாபனைகளும் அடுத்து உரோமையக் கலாபனைகளும் எழுந்தன. இத்தனை எதிர்ப்புகள் மத்தியிலும் திருச்சபை தளர்ச்சியடையவில்லை, வளர்ச்சியடைந்துகொண்டே சென்றது. இதனால் இம்முதல் மூன்று நூற்றாண்டுகளும் வீர வரலாற்றுக் காலம் என அழைக்கப்பட்டன.

## யூத கலாபனை

இது ஸ்தேவானுடைய மரணத்துடன் ஆரம்பமானது. ஆதிக்கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதர்களாய் இருந்தபோதும் யூதர்கள் கிறிஸ்தவர்களை வெறுத்தனர். கிறிஸ்துவை என்ன காரணத்திற்காய் வெறுத்தார்களோ அதேபோல் சீடர்களையும் கிறிஸ்தவர்களையும் வெறுத்தார்கள். அவர்கள் எதிர்பார்த்த மெசியாவாக கிறிஸ்து இல்லாததினால் வெறுத்தனர். ஆனால் கிறிஸ்தவர்கள் இயேசுவை மெசியாவாக ஏற்று விசுவசித்தனர்.

மேலும், கிறிஸ்தவர்கள் இயேசுவின் கொலைப் பழியை யூதர்கள் மேல் போட்டனர். யூதர்கள் ஜெருசலேம் அழிவிற்கும், தாங்கள் உரோமையரால் தாக்கப்படவும் கிறிஸ்தவர்கள் செய்த பாவமே காரணம் எனக் குற்றம் சாட்டினார்கள். எனவே, இத்தகைய யூதர்களின் பகை, வெறுப்பு ஸ்தேவானின் மரணத்திற்கு வழி

கோலியது. இருப்பினும் யூத கலாபனை கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கே வழி வகுத்தது. ஸ்தேவானின் மரணத்தை அடுத்து சிதறுண்டுபோன கிறிஸ்தவர்கள் ஜெருசலேமுக்கு வெளியே சென்ற இடமெல்லாம் நற்செய்தி அறிவித்து வந்தனர். இவ்வேளையில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தச் சென்ற வேத விரோதியான சவுல் இயேசுவைச் சந்தித்து கிறிஸ்தவரானதால் திருத்தூதுப் பயணங்கள் மூலம் திருச்சபை வளர வழிசெய்தார். எனவே, யூத கலாபனை திருச்சபை வளர்ச்சிக்குச் சாதகமாகவே அமைந்தது.

முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் திருச்சபை உரோமைப் பேரரசின் நகரமெல்லாம் மிகத் துரிதமாய்ப் பரவி வளர்ந்தது. இதனால் கிறிஸ்தவர்கள் தம்மைச் சுற்றி வாழ்ந்த உரோமையர்கள்பால் கவரப்பட்டனர். பல கீழைத்தேய வழிபாட்டு முறைகள் பேரரசினுள் நுழைந்தன. உரோமையர் பொதுவாய் புதுமதம் மட்டில் வெறுப்புடையவராய் இருந்தனர். இதனால் உரோமையருக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே சிலவேளைகளில் பல பிரச்சினைகள் எழுந்தன.


ஆனால், கிறிஸ்தவர் மட்டில் உரோமையர் கொண்டிருந்த மனப்பான்மை அதற்கு எதிர்மறையாய் இருந்தது. அவர்கள் கிறிஸ்தவர்களை வெறுத்ததுமல்லாமல், சந்தேகத்துடன் நோக்கினர். மேலும் கிறிஸ்தவர்கள் தங்கள் மதமே உண்மை எனக் கருதி உரோமையர்களை வெறுத்து ஒதுக்கினார்கள். இதனால் நாளுக்கு நாள் பகையும் வெறுப்பும் குரோதமும் வளர்ந்துகொண்டே சென்றது. இதனால் கிறிஸ்தவர்களுக்கெதிராய் உரோமையர்கள் எதிர்த்தெழுந்து அவர்களைத் துன்புறுத்தியதால் விளைந்ததே உரோமைக் கலாபனையாகும். கிறிஸ்தவர்களின் ஒற்றைப் போக்கும், அவர்கள் தேடிக்கொண்ட புறவினத்தாரின் வெறுப்புமே உரோமைக் கலாபனைக்கு முக்கிய காரணமாய் அமைந்தது. இவற்றுள் முக்கியமானவை 10 கலாபனைகளாகும்.

## திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் அருளாளர் ஆகிறார்



திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் வருகிற மே மாதம் முதலாம் திகதி வத்திக்கானில் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்படவுள்ளார் என்று வத்திக்கான் அறிவித்துள்ளது. இறையடியார் திருத்தந்தை இரண்டாம் ஜோன் போலின் பரிந்துரையால் நடைபெற்ற புதுமை குறித்த அதிகாரப்பூர்வ ஆவணத்தில் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கையெழுத்திட்ட பின்னர் வத்திக்கான் செய்தித் தொடர்பாளரான இயேசு சபைக் குரு அருட்தந்தை ஃபெதரிக்கோ லொம்பார்தி இந்த அறிவிப்பை வெளியிட்டார். இறைஇரக்கத்தின் ஞாயிறான மே முதலாம் திகதி அன்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் இவ்விழாத் திருப்பலியை நிகழ்த்தி இரண்டாம் ஜோன் போல் அருளாளர் என அறிவிப்பார். 2001ம் ஆண்டில் உயிர்ப்புவிழாக் கால இரண்டாம் ஞாயிறை இறைஇரக்கத்தின் ஞாயிறாக அறிவித்த திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல், 2005ம் ஆண்டு ஏப்ரல் 02 அன்று இந்த இறைஇரக்கத்தின் ஞாயிறு திருவிழிப்பு அன்று இறைபதம் அடைந்தார். இவரது பரிந்துரையால் பிரான்ஸ் நாட்டு அருட்சகோதரி ஒருவர் பார்க்கின்சன் நோயிலிருந்து அற்புதமாகக் குணமாகியுள்ளார் எனச் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. போலந்து நாட்டு வாடோவிஸ்சில் 1920ம் ஆண்டு மே 18 அன்று பிறந்த திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் சுமார் 27 ஆண்டுகள் திருத்தந்தையாகப் பணியாற்றியவர்.

# சமூகச் சாரல்



சமூகச் சாரலின் இன்னுமொரு தூறல் இது. இந்தச் சாரலில் சாரம் இழந்த வானவில்லாய், ஈரம் உலர்ந்த சருகுக் குவியலாய், மானுடப் பயணத்தின் அந்தத்தில், அந்திமம் நோக்கி இருக்கும் 'வயோதிபம்' பற்றிச் சிந்திக்கலாம்.

இன்றைய உலகமயமாக்கற் சூழலில் உறவுகளும் பிணைப்பும் பின்னணிக்குப் போய்விட, 'சுயநல வேட்கை' மேலோங்கி நிற்கிறது. பாரம்பரியமான கூட்டுக் குடும்ப முறைமை (Join Family System) சிதைவுற்று, தனிக்கலக் குடும்ப முறைமை (Neuclear Family System) செல்வாக்குப் பெற்று வருகிறது.

கணவன், மனைவி, பிள்ளைகளை மட்டும் உள்ளடக்கிய ஓரலகுக் குடும்ப முறைமையில் தாத்தா பாட்டிக்கோ, இதர மூத்த உறுப்பினர்களுக்கோ இடமில்லை. இதனால் வயோதிபம் இன்றைய சமூகக் கட்டமைப்பில் வேண்டப்படாத ஒன்றாக, வெறுக்கப்படுவதாக, அவமதிக்கப்படுவதாக உள்ளது.

சமூகவியலின் பார்வையில் வயோதிபம் ஆனது பௌதீக ரீதியிலான வயோதிபம் (Biological Aging), உளவியல் சார்பான வயோதிபம் (Psychological Aging), சமூக மட்டத்திலான வயோதிபம் (Social Aging) என்றவாறு வகைப்படுத்தப்படுகிறது.



## வயோதிபமும்-வாழ்வியலும்

மனித வாழ்வில் முதுமை என்பது புதுமையானதன்று, அது இயல்பானது. ஒவ்வொரு மனித ஜீவியும் எதிர்கொள்ளவேண்டியது. இயற்கையின் படைப்பில் இளமையின் வனப்பும், முதுமையின் வடிவமும் இணைந்தே உள்ளது. எனவே இளமையை வரவேற்று, மோகனம் இசைக்கின்ற இதயம், முதுமையின் பண்புகளை அதற்குரிய அனுபவத் திரட்சியுடன் ஏற்றுக்கொள்ள முற்பட்டால் முதுமையும் சுகமாக வாய்ப்புண்டு.

கொள்கையிலும், சட்டங்களிலும், இன்னும் போதனையிலும் முதுமையைக் கௌரவிக்கும்படியான அறைகூவல்கள் வெறும் கோஷங்களாகவே ஒலிக்கின்றன. நடைமுறையில் நாம் காண்பது எவற்றை?

- பெருகிவரும் முதியோர் இல்லங்களை
- துன்புறுத்தல், கைவிடுதல், தனிமைக்கு ஆளாகும் முதியோர்களை
- முதுமைக்கு எதிர்மறையான மனோபாவத்தை வளர்த்தெடுக்கும் சமூக நியமங்களை
- முதுமையின் இயல்பறிந்து இளைப்பாறுதல் வழங்கிடாத சமூக வக்கிரங்களை

நாம் மழலையாக இருந்தவேளை எமக்காகத் தம் வாழ்வையே



அர்ப்பணித்தவர்கள்... தம் அபிலாசைகளைத் துறந்தவர்கள்... எமது எதிர்காலம் ஒன்றையே தமது கனவாக்கி தம் ஆன்மாவையும் இதயத்தையும் உருக்கியவர்கள்... இன்று அவர்கள் இயலாமையில் தவிக்கும் நிலையில் இதயத்தில் ஈரமின்றி, மனச்சாட்சியை மறுதலித்து 'உனக்கும் எனக்கும் ஒட்டில்லை' என்று நிழல் கொடுக்க மறுத்திடும் நீசம் சமூகத்தின் கசப்பான நிஜமாகிறது.

பெற்றோர் மரணித்த பின் பத்திரிகை முழுப்பக்க விளம்பரமும் படாடோப இறுதிக்கிரியை அரங்கேற்றங்களும் இன்று மரபாகி நிற்கின்றன. இறுதி மூச்சு விடும் தருணத்தில் தன் இரத்த வாரிசின் கரம் பற்றி அந்த ஆன்மா சொல்ல விழைந்த சேதி உள்ளுறைந்த நிலையில் ஆடம்பரமான வயோதிபர் மனை, டொலர்கள், சிற்றுண்டிப் பொதிகள், வாழ்த்தட்டைகள் எல்லாம் பொருள் இழந்து போவது உண்மை.

பொருளாதார வேட்கையும், வேட்டையும் முதுமை பற்றிய சமூக மரபுகளை உடைத்தெறிந்த மிகக் குரூரமான பல சங்கதிகள் எமது சொந்தச் சமூகத்தின் உள்ளும் மௌன சாட்சியாய் நடைபெறுகின்றன. குறிப்பாக மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகளின் வாய்மொழி சார்ந்த வன்முறையானது வயோதிபம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் ஆகிறது.

சமகாலத் திரை ஊடகங்களின் மலினமான சித்தரிப்புகள் பெரியவர்களை 'பெரிசுகள்' ஆக்கிவிட்டுள்ளது. எல்லோரும் நாளை முதுமையை எதிர்கொண்டே ஆகவேண்டும் என்கிற யதார்த்தம் மறந்துபோன இன்றைய சமூகச் சூழல் பரிசீலிக்கப்பட வேண்டியதாகிறது.

## வயோதிபமும் வசந்தம் பாடலாம்

வெறும் பரீட்சைமையக் கல்விக்கு அப்பால் அக்கறை வாய்ந்த சமூக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், கல்வி மையங்கள் இவ்விடயம் சார்ந்த மனப்பாங்கு மாற்றத்தை படிக்கிரம நிலையிலேனும் ஏற்படுத்தப் பாடுபடுதல் தலையாய பணியாகிறது. அவ்வகையில் பின்வரும் ஆலோசனைகள் வயோதிபம் பற்றி ஆய்வு செய்யும் சமூகவியலாளர்களினால் முன்வைக்கப்படுகின்றன.

- *அரசாங்கமோ, இதர நிறுவனங்களோ முதியோர் நலம் நோக்கிய பணித்திட்டங்களை முன்னெடுக்கும் சமயங்களில், கிராமிய நகர்ப்புற வேறுபாடு, பால்நிலை வேறுபாடு, கல்வி மட்டம், தனிப்பட்ட ஆற்றல்கள் என்பவற்றைக் கவனத்தில் எடுத்தல்.*
- *கிராமிய நிலை தொடக்கம் தேசிய மட்டம் வரையிலும் அபிவிருத்திப் பணிகளில் முதியவர்களையும் இணைத்துக்கொள்ளுதல்.*
- *முதுமை தொடர்பிலான சமூக, உளவியற் பிரச்சினைகள், அவற்றின் தாற்பரியம், முதியோர் தொடர்பில் இளையவர்களின் பங்கு பற்றி பாடசாலை, பல்கலைக்கழக மட்டங்களில் கற்கை நெறிகளை ஏற்படுத்தல்.*
- *முதியவர்களுக்கான சமூக, சட்ட, பொருளாதாரப் பாதுகாப்பினை கண்காணித்தலும், உறுதிப்படுத்தலும்.*
- *முதியவர்கள் தமக்குள் ஒன்றுகூடல்கள், நகைச்சுவை அமைப்புகள், இலக்கிய, விளையாட்டு அமைப்புகளை நிறுவுதலை ஊக்குவித்தல்*

முதியோர் பராமரிப்பை இன்றைய உலகமயமாக்கல் ஒரு பெரும் தொழிற்றுறையாகக் கட்டமைத்து விட்டுள்ளது. அது அத்துணை ஆரோக்கியமானதன்று. சருகாகி, விறகாகி மனரீதியில் நொடித்துப்போய் நிற்கும் முதியவர்களை ஏன் நாம் 'சந்தியா காலத்துப் பூக்களாய்' நோக்கக் கூடாது. எமது பார்வையில் மாற்றம் ஏற்படின் வயோதிபமும் வசந்தம் பாடலாம்; பாடுதல் சாத்தியம்' "காவோலைகளும் பாவோலைகள் ஆகலாம் - மனக்கனிவின் மூலம்" என்பதே இம்மாதச் 'சமூகச் சாரல்' விடுத்திடும் செய்தி. மறுமாதம் மற்றொரு சிந்தனைத் தூறலுடன் சந்திப்போமா...?

**– சந்திரசேகரன் சசீதரன் –**




மிருகங்களை ஐந்தறிவுள்ளவை என்றும் மனிதர்களை ஆறறிவுள்ளவர்கள் என்றும் நாம் சொல்வதுண்டு. மனிதன், மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவற்றுடன் பகுத்தறிவு கொண்டவனாயும் காணப்படுவதால்தான் ஆறறிவுள்ளவன் எனப்படுகின்றான் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. அப்படியானால் ஓரறிவு, ஈரறிவு உயிர்கள் உண்டா? ஆம்! என்று தொல்காப்பிய நூற்பாக்கள் செப்புகின்றன.

## ஓரறிவு உயிர்கள்

உடம்பினால் அறிவன ஓரறிவு உயிர்கள் எனப்படும். அவை உடம்பினால் தட்பம், வெப்பம், வன்மை, மென்மை போன்றவற்றை அறியும். புறவுயிர்ப்புடைய புல்லும், அகவுயிர்ப்புடைய மரமும், கொட்டியும், தாமரையும், கழுநீரும் ஓரறிவுயிர்க்குச் சான்றாகும்.

*'ஒன்றறி வதுவே உற்றறிவதுவே'*
*'புல்லும் மரனும் ஓரறி வினவே*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'*
என்பன தொல்காப்பிய நூற்பாக்களாகும்.

## ஈரறிவுயிர்கள்

உடம்புடன் நாவினால் கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, இனிப்பு போன்ற சுவைகளை அறியும் உயிர்கள் ஈரறிவுயிர்கள் எனப்படும். சங்கு, கிளிஞ்சல் என்பன அவ்வகையின.

*'இரண்டறி வதுவே அதனொடு நாவே'*
*'நந்தும் முரளும் ஈரறிவினவே*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'*
என்பன தொல்காப்பிய நூற்பாக்களாகும்.

## மூவறிவுயிர்கள்

உடம்பு, நாவுடன் மூக்கினால் நன்னாற்றம், தீய நாற்றம் அறியும் உயிர்கள் மூவறிவுயிர்கள் எனப்படும். எறும்பும் அட்டையும் மூவறிவுயிர்களாகும்.

*'மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே'*
*'சிதலும் எறும்பும் மூவறிவினவே*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'*
என்பன தொல்காப்பிய நூற்பாக்களாகும்.

## நான்கறிவுயிர்கள்

உடம்பு, நா, மூக்குடன் கண்ணினால் வெண்மை, செம்மை, பசுமை, கருமை, நெடுமை, குறுமை, பருமை, நேர்மை, வட்டம், கோணம், சதுரம் என்பனவற்றை அறியும் உயிர்கள் நான்கறிவுயிர்கள் எனப்படும். நண்டு, தும்பி, பொன்வண்டு, கருவண்டு என்பன நான்கறிவுயிர்களாகும்.

*'நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே'*
*'நண்டுந் தும்பியும் நான்கறி வினவே*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'*

## ஐந்தறிவுயிர்கள்

உடம்பு, நா, மூக்கு, கண்ணுடன் செவியினால் ஓசை வேறுபாடும், சொற்பொருள் அறியும் உயிர்களை ஐந்தறிவுயிர்கள் எனத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். நான்கு கால்களையுடைய விலங்குகளும், பறவைகளும், ஊர்வனவற்றுள் பாம்பு போன்றவையும், நீரில் வாழ்வனவற்றுள் மீன், முதலை, ஆமை போன்றனவும் ஐந்தறிவுயிர்கட்குச் சான்றாகும்.

*'ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே'*
*'மாவும், புள்ளும் ஐயறிவினவே*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'*

## ஆறறிவுயிர்கள்

உடம்பு, நா, மூக்கு, கண், செவியுடன் மனத்தினால் அறியும் உயிர்களை ஆறறிவுயிர்கள் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். ஆறறிவுயிர்கள் உலகிலுள்ளவற்றை அறியும் திறன் பெற்றவையாகும். மக்கள், தேவர், அசுரர், இயக்கர் முதலானோர் இவ்வகையினர் ஆவர்.

*'ஆறறி வதுவே அவற்றொடு மனனே'*
*'மக்கள் தாமே ஆறறி வுயிரே*
*பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'*

இவ்வாறு ஓரறிவுயிர்கள் தொடக்கம் ஆறறிவுயிர்கள் வரைக்கும் தொல்காப்பியர் இலக்கணம் கூறியுள்ளார்.

○

# சிலுவைப்பாதையின் சேதி...

விண்ணவன் விடுத்த ஓலை அது
மண்ணிலே மரணத்தின் சாயல் அது...
கண்ணிலே நீரை உகுப்பதது...
காவியம் கண்டிடாத் தியாகம் அது...!

மாம்சத்தின் பாதை மடிந்துவிட
மானுடத்தின் இடிபாட்டை நிமிர்த்திவிட...
ஆவியை அளித்திட்ட புனிதம் அது...
அகிலமே அறியாத விந்தை அது...!

நிராகரிக்கப்பட்ட நீதி...
ஒப்பேற்றப்பட்ட ஒருதலைப்பட்சமான
தண்டனை
காட்டிக் கொடுக்கப்பட்ட துரோகக் கசடு...
மௌனிக்கப்பட்ட நியாயங்கள்..!

இவற்றினிடை
நிந்தையும் அவமதிப்பும் கைவிடலும்
காடியும் முள்முடியுமாய் நின்ற
மனுமைந்தனின்
இருதயம் எதனைப் பேசி இருக்கும்!?

ஆயிரம் மடங்குப் பொய்மையின்
இரைச்சலில்
நீதி அன்று நிசப்தமானதா...?
தாயின் உள்ளம் தவித்துக் கலங்கிட,
தேவ
சேயின் குருதி கொட்டியதா...?

கல்லறை திறந்து - மரணம்
உயிர்ப்பானபோது
மரபின் சாசனங்கள் நெரிந்துபோயின!
நாமும் உயிர்ப்போம் நமக்குள்...
சிலுவைப்பாதையின் சங்கல்பநாதம்
விடுத்திடும் சேதிக்குச் செவிகொடுத்து
மானிட வாழ்தலை
தபசின் தூய அருவியில் அமிழ்த்தலாம்,
இனி...

**- முறவூர் சந்திரசேகரன் சசீதரன்**




# பெண்ணே உன் கதி இதுதானா?

அன்று சுப்பிரமணிய பாரதியார் பெண்ணை அடிமைப்படுத்த வேண்டாம் என்று பாடினார். இன்று சர்வதேச மகளிர் தினம் ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதம் 8ம் திகதி கொண்டாடப்படுகின்றது. ஆனால், என்ன நடக்கின்றது? நாட்டில் தொண்டைத் தண்ணீர் வற்ற மேடைகளில் பேசுகின்றார்கள்.

திருவிவிலியத்திலே புனித பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலே 5:21-33இல் கணவர் மனைவியரை எப்படி நேசிக்கவேண்டும் என்று விரிவாகக் கூறப்பட்டுள்ளது. 31ம் வசனத்திலே "கணவர் தம் தாய் தந்தையரை விட்டுவிட்டு மனைவியுடன் ஒன்றித்திருப்பார். இருவரும் ஒரே உடலாய் இருப்பர்" என்று மறைநூல் கூறுகிறது.

ஆனால், எமது நாளாந்த வாழ்வில் எத்தனை குடும்பங்களில் பிரச்சினைகளைக் காண்கிறோம்? எத்தனை கணவர் மனைவியரைத் தம் உடலில் ஒரு பகுதியாக நேசிக்கிறார்கள்? தொழிலுக்குச் செல்லும் மனைவியாக இருந்தால் அவள் படும் வேதனையும், சோதனையும் சொல்லவே வேண்டாம். வீட்டு வேலை, குழந்தைகளின் வேலை என இயந்திரமாக ஓடுகிறாள். அவளுடைய வேலைகளை எத்தனை கணவர் பங்குபோட்டுச் செய்கின்றனர்? காதலித்துக் கைப்பிடிக்கின்றான். 'பௌர்ணமி நிலவே! நீ மட்டும் போதும்' என்று சொல்லிக் கைப்பிடிக்கின்றான். பொருளாதாரக் கஷ்டம் வந்துவிட்டால் 'நீ சும்மா வந்தவள்தானே' என்று தேள் போல் நாள்தோறும் குத்திக்கொண்டே இருக்கின்றான். சில கணவர் மத்திய கிழக்கு நாட்டிற்கு வீட்டுப் பணிப்பெண்களாக மனைவியரை அனுப்புகின்றனர். தனது பிள்ளைகளையும் கணவனையும் பிரிந்து வேதனையைத் தன் உள்ளத்திலே சுமந்து செல்கின்றாள். அவள் அனுப்பும் பணத்திலே உல்லாசமாக வாழுகின்றான் கணவன். அவள் மீண்டும் நாட்டிற்கு வந்தவுடன் அவளுடைய கற்பைச் சந்தேகிக்கின்றான். இதுதான் இன்றைய பெரும்பான்மையான பெண்களின் நிலை. ஆண்களே! தயவுசெய்து சிந்தியுங்கள். பெண்ணின் உள்ளத்தையும் உடலையும் நேசியுங்கள்.

– திருமதி. லீலாவதி சந்திரசிறி



## குறும்(புப்)பா - 58

அபிவிருத்தி எங்கதிகம் உண்டோ

ஆபத்தும் அங்கதிகம் உண்டோ?

புலியோடும் உடைந்தது அணுஉலையும் தகர்ந்தது

அச்சத்தில் உறைந்ததடா உலகம்

~ மலர் ~

ஆன்மீகம் என்பது மனிதனில் நிலை கொண்டுள்ள ஓர் அம்சம்! அது அவனுக்குள் இருக்கின்ற ஒரு வழியாக இருக்கின்றது. சமயங்கள் பலதும் ஆன்மீகத்தை வளர்த்துக் கொள்ள மனிதனுக்கு உதவுகின்றன. ஆன்மீகமானது புத்திக்கு அப்பாற்பட்டதாக இருக்க முடியாது. ஆனாலும் அது புத்திக்குட்பட்டதாக அமைவதுமில்லை. மனிதனுக்குள் புத்தி எங்கே அமைந்திருக்கின்றது என்று சொல்லி விட முடியும். ஆனால் ஆன்மீகம் எங்கு நிலை கொண்டுள்ளதென்பதை யாராலும் வகைப்படுத்திச் சொல்லிவிட முடியாது. உள்ளத்தில் உறைகிறது ஆன்மீகம் என்று சொல்ல முடியுமானாலும், உள்ளம் மனிதனில் எங்கே அமைந்திருக்கின்றது என்பதை யார்தான் கூறிவிட முடியும்?

உணர்வுகள், உணர்ச்சிகள் என்பவற்றைப் புரிந்து கொள்ளுகின்ற, பகுத்தறிகின்ற அறிவை - மூளையை உள்ளம் என்று கூறிவிட முடியாது.

உள்ளமும் அறிவும் தொடர்புபட்டவையாக இருந்தாலும், உள்ளம் அறிவாக இருக்க முடியாது. ஆன்மீகம் இந்த உள்ளத்துடன் தொடர்புபட்டதாகத் தான் எடுத்துக் கொள்ளப்படவேண்டியிருக்கின்றது.

ஆன்மீகம் என்பது மனிதன் தன்னைத் தனக்குள்ளே கண்டுகொள்ளவும், மக்களின் வாழ்வை வளப்படுத்தும் அடிப்படை மதிப்பீடுகளை, பெறுமானங்களை, அர்த்தங்களைக் கண்டுகொள்ளவும் உதவுகின்ற உள்மனப்பாதை என்று கொள்ளப்படலாம். தியானங்கள், செபங்கள், உபவாசங்கள் ஒருவரின் தனி வாழ்வை, உள் வாழ்வை வளப்படுத்த உதவும் ஆன்மீகப் பயிற்சிகளாக அமைகின்றன. இந்த பயிற்சிகளினூடாக மனிதன் தான் கண்டடையும் ஆன்மீகத்தின் உதவியுடன் மிகப் பெரிய யதார்த்தத்துடன் (அதை இறைவன் என்று கூடச் சொல்ல முடியும்) ஒன்றுபடுகின்ற அனுபவத்தைப் பெறுகின்றான். தன் சுயத்தோடு ஒன்றிணைகின்றான். மற்றைய தனிநபர்களுடன் அல்லது பொதுவாக சமுதாயத்துடன் ஒன்றிணைகின்றான், இயற்கையுடன் ஒன்றிணைகின்றான்.

மனித வாழ்வின் தூண்டுதலாக, ஊக்கப்படுத்தும் காரணியாக அல்லது அந்த வாழ்வை வடிவமைக்கும் காரணியாக ஆன்மீகம் அமைந்து விடுகின்றது என்பது உண்மை. புனிதம் அல்லது தூய்மை நோக்கிய தேடலை ஒருவனுக்குள் விதைப்பது ஆன்மீகமாகும். மனிதன் புனிதனாக உருமாற்றம் பெற ஆன்மீகந்தான் வழிகோலுகின்றது.

ஆழமாக எண்ணிப் பார்க்கையில், மன ஆரோக்கியம், உறவின் நீடிப்பு, திருமண பந்தம், பெற்றார் நிலை, வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திற்கும், அனுபவத்திற்கும் முகங்கொடுத்து நிற்கின்ற தன்மை முதலியவற்றை மனிதனுக்கு வழங்குகின்றது ஆன்மீகம், அதுதான் வாழ்விற்கு அர்த்தத்தையும் வழங்குகின்றது. ஆன்மீகம் இல்லாத வாழ்வு வெறும் வாழ்வு உப்புச் சப்பற்ற வாழ்வு. போட்டது போட்டபடி என்று வாழும் வாழ்வு ஒரு வாழ்வா? இல்லை, வகுத்த வழி போகும் பயணம் என்று அமைவது ஒரு வாழ்வா? ஆன்மீகந்தான் இதற்குப் பதில்!



சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
15- 04 - 2011




# விவிலியம் கற்போம் - 96

(எண்ணிக்கை 31:28–54)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடம் "போருக்குச் சென்றிருந்த படை வீரரிடமிருந்து ஆள்கள், மாடுகள், கழுதைகள், மந்தைகள், ஆகியவற்றில் ஐந்நூற்றில் ஒன்றை ஆண்டவருக்குரிய பங்காகக் கொடுங்கள். அவர்களுக்குரிய பாதிப் பங்கிலிருந்து அதை எடுத்து .................................... உயர்த்திப் படைக்கும் படையலாகக் குரு எலயாசரிடம் கொடுக்க வேண்டும். இஸ்ரயேல் மக்களுக்குரிய பாதிப் பங்கான ஆள்கள், காளைகள், கழுதைகள், மந்தைகள் ஆகியவற்றிலிருந்து ஐம்பதுக்கு ஒன்று வீதம் எடுத்து ஆண்டவரின் திருவுறைவிடத்துக்குப் பொறுப்பாயிருக்கும் லேவியரிடம் கொடுக்க வேண்டும். .................................... குரு எலயாசரும் ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தனர். படைவீரர் சூறையாடிய கொள்ளைப் பொருளில் மீந்திருந்தவை; ஆறு லட்சத்து எழுபத்தையாயிரம் ஆடுகள், எழுபத்தீராயிரம் மாடுகள், அறுபத்தோராயிரம் கழுதைகள், .................................... மொத்தம் முப்பத்தீராயிரம் பேர். போருக்குச் சென்றவர்களுக்குரிய பாதிப் பங்கிலுள்ள ஆடுகளின் தொகை மூன்று லட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு. ஆண்டவர் பங்கில் இருந்த ஆடுகள் அறுநூற்று எழுபத்தைந்து. காளைகளின் தொகை முப்பத்தாறாயிரம்; அவற்றிலிருந்து அவர்கள் ஆண்டவருக்குரிய ............................ அளித்தவை அறுபத்து ஒன்று. கழுதைகளின் தொகை முப்பத்தாயிரத்து ஐந்நூறு; அவற்றிலிருந்து அவர்கள் ஆண்டவருக்குரிய பங்காக அளித்தவை அறுபத்து ஒன்று. ஆள்கள் தொகை பதினாறாயிரம்; அவர்களிலிருந்து ஆண்டவருக்குரிய பங்காகத் தரப்பெற்றவர்கள் .................................... பேர். ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே ஆண்டவருக்குரிய பங்காகிய உயர்த்திப் படைக்கும் படையலை மோசே குரு எலயாசரிடம் கொடுத்தார். போருக்குச் சென்றிருந்த ஆள்களுக்குரியது போக மோசே ............................ மக்களுக்குப் பிரித்துக் கொடுத்தப் பாதிப் பங்கு; மக்கள் கூட்டமைப்புக்குரிய பாதிப் பங்கில் ஆடுகள் மூன்று லட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு. காளைகள் முப்பத்தாறாயிரம். கழுதைகள் முப்பத்தாறாயிரத்து ஐந்நூறு. ஆள்கள் பதினாறாயிரம் பேர். ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே இஸ்ராயேல் மக்களுக்குரிய பாதிப் பங்கிலிருந்து ஆள்களிலும் கால்நடைகளிலும் ஐம்பத்துக்கு ஒன்று வீதம் எடுத்து அவற்றை ஆண்டவரின் திருவுறைவிடத்திற்குப் பொறுப்பாயிருந்த லேவியரிடம் மோசே கொடுத்தார். பின்பு .............................. படைத்தளபதிகள் ஆயிரத்தவர் தலைவர்களும், நூற்றுவர் தலைவர்களும் மோசேயை அணுகினர். அவர்கள் மோசேயிடம், "உமது அடியார்களாகிய நாங்கள் எங்கள் அதிகாரத்திற்குட்பட்ட போர்வீரரை எண்ணியபோது ஒருவரும் குறையவில்லை. அத்துடன் ஆண்டவர் முன்னிலையில் எங்களுக்குக் ......................... நீக்கம் செய்வதற்காக நாங்கள் ஒவ்வொருவரும் தேடி எடுத்த பொன்னணிகளான காப்பு வகைகள், கடகங்கள், முத்திரை மோதிரங்கள், காது வளையங்கள், .................................... ஆகியவற்றை ஆண்டவருக்கு நேர்ச்சையாகக் கொண்டு வந்துள்ளோம்" என்றனர். மோசேயும் குரு எலயாசரும் அவர்களிடமிருந்த கைவினைப் பொருள்களான எல்லாப் பொன் அணிகளையும் பெற்றுக் கொண்டனர். ஒவ்வொரு .................................... கொள்ளைப் பொருளைக் கவர்ந்து கொண்டான். மோசேயும் குரு எலயாசரும் ஆயிரத்தவர், நூற்றுவர் தலைவர்களிடமிருந்து பொன்னைப் பெற்றுக்கொண்டனர்; அதை ஆண்டவர் திருமுன் இஸ்ரயேல் மக்களுக்கு ஒரு நினைவுச் சின்னமாகச் சந்திப்புக் கூடாரத்தினுள் கொண்டு வந்தனர்.

**விடைகள் :** **இஸ்ரயேல், பல்லாயிரத்தவர், குமிழ்மணிகள், கறை, ஆண்டவருக்கு, ஆள்கள், முப்பத்திரண்டு, படைவீரனும், பங்காக, மோசேயும்**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 96

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. மனிதனால் முதன்முதல் பயன்படுத்தப்பட்ட உலோகம்
(செம்பு, இரும்பு, வெள்ளி)

2. பெரிகார்டியம் என்பது
(ஒரு விஞ்ஞான விதி, இதயத்தை மூடியுள்ள உறை, ஓர் உறுப்பு)

3. சக்திதாசன் என்று தன்னை அழைத்துக்கொண்ட தமிழ்க் கவிஞர்
(நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, கனக சுப்புரெத்தினம், சுப்பிரமணிய பாரதி)

4. இலங்கையின் முதலாவது தமிழ்த் திரைப்படம்
(தோட்டக்காரி, வாடைக்காற்று, நான் உங்கள் தோழன்)

5. சர்வசன வாக்குரிமையை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பு
(சோல்பரி யாப்பு, டொனமூர் யாப்பு, 1வது குடியரசு யாப்பு)

6. நிழல் எனுஞ் சொல் நீழல் என வருவது
(விரித்தல் விகாரம், மெலித்தல் விகாரம், நீட்டல் விகாரம்)


பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 96
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..................................................



# போட்டி முடிவுகள்

## விவிலியம் கற்போம் - 94 விடைகள்

ஆணையிட்டு, இளமையில், உறுதிமொழியையும், ஒப்புதல், பொருத்தனை, பொருத்தனைகள், கட்டுக்குள்ளாக்கும், பொறுப்பாவாள், மறுப்பு, நிலைக்கா

## அறிவை வளர்ப்போம் - 94 விடைகள்

1) பவணந்தி அடிகள் 2) டோக்கியோ 3) லிறா 4) இரத்தசோகை
5) ஆடிக் கறக்கணும் 6) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

## பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி ருபா 200/= பரிசு பெறுவோர்**

- ஞானச்செல்வம் யுகந்தன்
  தாழங்குடா - 03
  ஆரையம்பதி
- மார்சலின் அன்ரன் குருஸ்வோன்
  380, திருமலை வீதி
  மட்டக்களப்பு

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ருபா 100/= பரிசு பெறுவோர்**

- த. கோபிசாந்
  10ம் வட்டாரம், பிரதான வீதி
  கொக்கட்டிச்சோலை
- T. ஜோன்சன்
  13ம் குறுக்கு
  திருப்பெருந்துறை

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 46 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 300/=**
  T.F. கிளென்டா
  இல-25, 2ம் குறுக்கு
  வேலூர் கல்லடி
  மட்டக்களப்பு
- **இரண்டாம் பரிசு - 200/=**
  சிவராசா அன்றுக்கா
  சந்தை வீதி
  தேற்றாத்தீவு 01
  தேற்றாத்தீவு
- **3ம் பரிசு - 100/=**
  டினா நொயலின்
  - மார்ட்டில்
  மாயழகு வீதி
  அக்கரைப்பற்று 09

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

## குடும்ப ஆண்டு 2011




## தாண்டியடி கல்வாரி மலையில்

# சிலுவைப்பாதை யாத்திரை

கல்முனை மறைக்கோட்ட முதல்வரின் ஆசிரோடு ஆரம்பமாகி
திருகோணமலை மறைக்கோட்ட முதல்வர்

## அருட்பணி. கிங்ஸ்லி றொபட் அடிகளாரின்

12ம் நிலைத் தியானத்தோடு மறைமாவட்ட, துறவறசபைக்
குருக்களின் கூட்டுத் திருப்பலியுடன் நிறைவுக்கு வரும்

## நாள்: 09.04.2011 சனிக்கிழமை

## நேரம்: காலை 8.00 மணி